: பிப்ரவரி, 2012

: ஆசிரியருக்கு

: KAATRODU ORU UDTHAM

: Indira Soundarrajan

: February, 2012

: Book Print 11.6

es : 184

: 80/-

யம்

மண்ட்ஸ்,

ரசம் சாலை,

ன்னை - 600 017.

2899, 24327696

umagalnilayam.com

: RVK DESIGNERS,
Chennai - 2.
Mobile: 9710329866

PRINTING CO., Chennai - 5 ✆ 28446166, :

ருளடக்கம்

	பக்கம்
ரு யுத்தம்	3
	93

காற்றோடு ஒரு யுத்தம்

1

சில நம்பிக்கைகள் வினோதமானவை. சில நம்பிக்கைகள் ஆழமானவை. சில நம்பிக்கைகள் புதிரானவை. சில நம்பிக்கைகள் அர்த்தமற்றவை. ஆனாலும் நம்பிக்கை நம்பிக்கைதான்! நம்பிக்கை இல்லாமல் ஒரு அடியை கூட ஒருவரால் எடுத்து வைக்க முடியாது. படுக்கையில் இருந்து கண் விழிக்கும்போதே நம்பிக்கையும் சேர்ந்தே விழிக்கிறது. இன்றைய தினம் நிச்சயம் சூரியன் உதிக்கும், காற்றானது நின்று போகாது. குடிக்க நீரும் நிச்சயம் கிடைக்கும் - போன்ற விஷயங்கள் எல்லாம் காலம் காலமாய் நம்மை துளிகூட ஏமாற்றிடாத நம்பிக்கைகள்!

வாசலில் மோட்டார் சைக்கிள் சப்தம்!

எட்டிப் பார்த்தாள் சிந்துஜா.

கேசவன் உள் நுழைந்து கொண்டிருந்தான். முப்பது வயதாகிறது.

''அண்ணா வந்தாச்சு'' என்று குரலெடுத்தாள் சிந்துஜா.

அதைக் கேட்டு சமையல்கட்டில் இருந்து அவள் அம்மா அபிராமியும், கொல்லைப்புரத்தில் இருந்து அவன் மனைவி வைதேகியும், பூஜை அறைக்குள் இருந்து அப்பா ராஜாராமனும் கூடத்துக்கு வந்தார்கள்.

கூடமாகிய ஹாலில் சில பிரம்பு நாற்காலிகளும் ஒரு குஷன் சோபாவும் போடப்பட்டிருந்தது. நடுவில் ஒரு பிளாஸ்டி மோடா. அதன்மேல் இன்றும் அந்த குடும்பம் ஒரு படிக்கும் குடும்பம் என்பதற்கு தோதாக தினசரி பேப்பர்களும், வாரப் பத்திரிகைகளும் இருந்தன. அவைகளில் ஒன்று சிந்துஜா கையில் இருந்தது. கேசவன் ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்தான்.

நிறையவே வியர்த்துப் போயிருந்தான். பெருமூச்சும் விட்டான்.

எல்லோரும் அவனையே வெறித்துப் பார்த்தார்கள்.

அபிராமி மட்டும் பேச ஆரம்பித்தாள்.

''போன காரியம் என்னப்பா ஆச்சு?''

''நல்லவிதமா இருந்தா நான் இப்படியா பெருமூச்சு விடுவேன்?''

- அவனும் திருப்பி கேட்டான்.

''சரிப்பா என்ன நடந்தது - அதையாவது சொல்லு'' - இது அவன் அப்பா ராஜாராமன்.

''பிரயோஜனமில்லப்பா. கருப்பூர் வீடுன்னாலே எல்லாரும் தலை தெரிக்க ஓட்றாங்கப்பா..''

''அப்ப அதைக் கொண்டு காலணா பேராதுன்னு சொல்லு.''

''இப்ப அதுதான் நிலை. ஆனா மரக்காணம் ராவுத்தர் ஒருத்தர் மட்டும் அங்க போய் யாராவது ஒரு மாசம் இருந்துடட்டும். அப்புறம் நானே வாங்கிக்கறேன்னு சொல்றார்.''

''நிஜமா வாங்கிக்கறேன்னாரா?''

''ஆமாம்ப்பா... ஆனா யார் போய் அந்த வீட்ல இருக்க முடியும்?''

''இது என்னப்பா கேள்வி? நானும் உன் அம்மாவும் போய் இருக்கோம்.''

''அப்பா..!''

''ஏம்ப்பா.. பயமா இருக்கா?''

''இல்லப்பா அந்த சத்தியம்...''

''ஓ... நீ அதைச் சொல்றியா.. நாங்க அங்க குடிதான் இருக்கக்கூடாது. தங்கி இருக்கலாம்!''

''இல்லப்பா வேண்டாம்... நான் வேற வழி இருக்கான்னு பாக்கறேன்.''

''இதோ பார்... கல்யாண நாள் நெருங்கிக்கிட்டே இருக்கு. ஏதோ அந்த வீட்டை வித்தாதான் நாலு காசு வந்து கல்யாணத்தையும் நல்லபடியா பண்ண முடியும். வேற வழி இருக்கா பாக்கறேன்னு காலம் கடத்தாதே - இந்த ராவுத்தரை கடவுள்தான் அனுப்பி வெச்சிருக்கார் விட்டுடக் கூடாது.''

- அவர்களுக்குள் பேச்சு சற்று சூடான நிலையில் வாசல் பக்கம் நிழலாடியது.

கேசவனின் நண்பன் வின்சென்ட் வந்து கொண்டிருந்தான். முழுப் பெயர் வின்சென்ட் ராமச்சந்திரன்!

வின்சென்ட் என்பது அவர்களின் குடும்பப் பெயர். அதற்கு பின்னால் ஒரு பெரிய கதையே ஒளிந்திருக்கிறது. அதை அவன் சொல்ல ஆரம்பித்தால் நமக்கு தான் தூக்கம் வரும். அவ்வளவு நீளம்... அது இப்போது வேண்டாம்.

''வா வின்சென்ட்..'' - வரவேற்றான் கேசவன்.

''அதான் வந்துகிட்டே இருக்கேனே... அடடே என்ன இது இன்னிக்கு வீட்ல எல்லாரும் இருக்கீங்க போல இருக்கு?''

''என்னப்பா வின்சென்ட் நீ எப்படி இருக்கே?'' - கேட்டார் ராஜாராமன்.

''எனக்கென்ன அங்க்கிள் ரொம்ப நல்லா இருக்கேன்.''

''சந்தோஷம். நீயாவது நல்லா இருக்கேன்னு மனசார சொல்றியே. ரொம்ப சந்தோஷம்'' - ராஜாராமன் சொன்ன பதில் வின்செண்ட்டை யோசிக்க வைத்தது.

''அங்க்கிள்.''

''என்ன வின்செண்ட்?''

''நீயாவது நல்லா இருக்கேன்னு சொன்னியேன்னு பொடி வெச்சு நீங்க பேசறத பார்த்தாக்கா இங்க ஏதோ பிரச்னை மாதிரி தெரியுதே?'' - பாய்ன்ட்டை பிடித்தான் வின்செண்ட்.

''பிரச்னைதாம்ப்பா... வாழ்க்கைக்குள்ள சிலருக்கு பிரச்னைகள் இருக்கும். என் வரையில் பிரச்னைக்குள்ள தான் வாழ்க்கையே இருக்கு...'' ராஜாராமனின் பீடிகை வின்செண்ட்டை நிறையவே யோசிக்க வைத்தது.

''கேசவா... உன் அப்பா பேசறதுல இருந்து நீ ஏதோ கஷ்டத்துல இருக்கேன்னு தெரியுது. என்கிட்ட என்னன்னு சொல்ல மாட்டியா?''

''சொல்ல என்ன இருக்கு வின்செண்ட். தங்கை சிந்துஜாவுக்கு நல்ல மாப்பிள்ளை அமைஞ்சிருக்கு. பைய னுக்கு அமெரிக்காவுல ஐ.டி. கம்பெனியில் வேலை.''

''அதெல்லாம் தான் தெரிஞ்ச விஷயமாச்சே.... இப்ப கல்யாணச் செலவுக்கு பணமில்லையா. அதான் உங்க பிரச்னையா?''

''ஆமாம்ப்பா... எங்க சொந்த ஊரான கருப்பூர்ல இருக்கற வீட்டை வித்தா பணம் வரும். அதைக் கொண்டு கல்யாணத்தை பண்ணிடலாம்னு பார்த்தா'' - இழுத்தான் கேசவன்.

''ஏன் அந்த வீட்டை நீங்க கேக்கற விலைக்கு வாங்க யாரும் முன் வரலையா?''

''அது... அது...''

- கேசவன் எதையோ சொல்ல முடியாமல் இழுத்தான். அதுவே அந்த வீட்டின் பின்புலத்தில் ஏதோ இருப்பதை உணர்த்திவிட்டது. அப்போது கேசவனின் தொண்ணூறு வயது பாட்டி உள்ளே தனி அறைக்குள் இருந்து குரல் கொடுத்தாள்.

''கேசவா... கேசவா...''

''பாட்டி கூப்பிட்றா போல இருக்கு...''

''கேசவா நீ போகாதே. நீ இப்ப போனா அம்மா என்ன சொல்வான்னு எனக்கு தெரியும்.''

''அப்பா...''

''நீ போ.. போய் உன் வேலையைப் பார். நானும் உன் அம்மாவும் நாளைக்கே கருப்பூர் போறோம். அந்த வீட்டை சுத்தப்படுத்தி எல்லாத்தையும் ஒழுங்குபடுத்தி அங்க தங்கறோம். பகல் பொழுதெல்லாம் அங்க இருப் போம். ராத்திரி படுத்துக்க மட்டும் மணியகாரர் வீட்டுக்கு போயிட்றோம்.''

''அப்பா இல்லப்பா - நீங்க தயவு செய்து அங்க போக வேண்டாம். நான் வேற வழில அதை டிஸ்போஸ் பண்ண பாக்கறேன்'' என்று கேசவன் அப்பா அம்மாவை உறுதியாகத் தடுத்து நிறுத்தினான்.

''போடா பைத்தியக்காரா... இங்க கல்யாணம் தலைக்கு மேல் இருக்கு. இதுல வேற வழி அது இதுன்னு... நீ போ... எனக்கு கல்யாணம் ஒரு குறைவுமில்லாம நடந் தாகணும். அதான் முக்கியம். நாங்க போறோம்னா போறோம்...'' - ராஜாராமன் அழுத்தமாக சொன்னதை தனது மெளனத்தில் அங்கீகரித்தாள் அவர் மனைவி அபிராமி. அதன் பின் கேசவன் அவர்களுடன் வாதம் செய்யத் தயாராயில்லை.

உள்ளே இருந்து பாட்டியிடம் மட்டும் இடைவிடாத அழைப்பு.

''கேசவா... கேசவா... கேசவா...' என்று மனது பொறுக்காமல் பாட்டி பங்கஜத்தின் அறை நோக்கிச் சென்றான்.

'போகாதே...' என்கிற ராஜாராமனின் குரலை மீறிக் கொண்டு... எல்லாமே வின்செண்ட்டுக்கு வினோதமாக இருந்தது.

★ ★

உள்ளே கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தாள் பங்கஜம்.

சில அடி தொலைவுக்குள் மரணம் வந்துவிட்டதைப் போன்ற தோற்றம். உடம்புக்கு மேல் போர்வை அடைந்து கிடந்தது. அறைக்குள்ளேயும் ஒருவித அழுக்கு வாசம். அவ்வளவாக வெளிச்சமும் இல்லை.

முதுமைக்கும் முதியவர்களுக்கும் மரணம் வரத் தாமதமானால் தனியே ஒரு நரகம் தேவையில்லை. அவர்கள் அனாதரவாக கட்டிலில் கிடப்பதே கூட நரகம்தான்... பின் தொடர்ந்து சென்ற வின்செண்ட்டையும் அந்த காட்சி என்னவோ செய்தது.

''பாட்டி... கூப்ட்டியா?''

''கிட்ட வா...''

''கிட்டதான் இருக்கேன் - சொல்லு...''

''அந்த வீட்டுக்குப் போகாதே - அதை மறந்துடு...''

''போறும் பாட்டி... அதை அப்படியே எப்படி விட முடியும்... அது தாத்தா சம்பாதிச்ச சொத்துதானே? பேரன் எனக்கு அதுல உரிமை இல்லையா?''

''இல்லை... அது இப்ப நம்ப சொத்தே கிடையாது. உன் தாத்தா உன்னை காப்பாத்தத்தான் அதை அந்த கருப்புக்கு கொடுக்கிறதா சத்தியம் பண்ணினார். அது கருப்புக்குச் சொந்தம்...'' எனும்போது ராஜாராமன் வந்து பேசினார்.

''ஐயோ அம்மா... நீ சொல்ற கருப்புங்கறது இப்ப அங்க எங்க இருக்கு? முட்டாள்தனமா அப்பா சத்தியம் பண்ணிட்டு இப்ப யாருக்கும் பிரயோஜனம் இல்லாமன்னா அது இருக்கு?''

''கருப்பு எங்க இருக்குன்னா கேக்கறே..? அவன் எல்லா இடத்துலயும் இருக்கான். காத்து மாதிரி அவன். அதனாலதான் காத்து கருப்புன்னு சொல்வோம்.''

''இந்த வியாக்யானமெல்லாம் கேக்க நல்லாதான் இருக்கு. ஆனா இதனால ஒரு பிரயோஜனமும் இல்லாம அந்த வீடு அங்க இருண்டு போய் கிடக்கு. அதை வித்தா பணம் வரும். அது மட்டுமில்ல. அந்த வீட்லயும் நாலு பேர் குடி இருப்பா. உபயோகமா இருக்கும்....''

''இல்ல... அங்க யாரும் குடி இருக்க முடியாது. சத்தியத்தை மீறி யார் அங்க போனாலும் காத்து கருப்பு சும்மா விடாது.''

முதுமையிலும் பாட்டி பங்கஜம் தீர்க்கமாகவே பேசினாள். வின்செண்ட்டுக்கு பாட்டியின் பேச்சு புதிராக இருந்தது.

''கேசவா... நான் இந்த அறைக்குள்ளயே நுழையாதேன்னேன். கேட்டியா? என் அம்மாவுக்கு பயம். அதனால அவ இப்படித்தான் பேசுவா - நீ போ - போய் அடுத்து ஆக வேண்டியத பார்...''

- ராஜாராமன் அவனை விலக்கிவிட்டார். பாட்டியோ கத்திக் கொண்டே இருந்தாள்.

''வேண்டாம் - என் பேச்சை தயவு செய்து கேளுங்கோ. கருப்பூர் பக்கமே போகாதீங்கோ...'' என்றாள். வின்செண்ட்

டுக்கு மட்டும் பாட்டியின் பேச்சில் ஒரு உண்மை ஒளிந்திருப்பது நன்றாக புரிந்தது!

2

நம்பிக்கையில்தான் இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு ரயிலிலோ பஸ்ஸிலோ ஏறி நாம் அமரும்போது அந்த வாகனம் நம்மை நிச்சயம் நல்லவிதமாக கொண்டு சென்று சேர்க்கும் என்று நம்புகிறோம். ஒரு தபால் பெட்டியில் தபாலை சேர்க்கும் போதும் அந்த தபால் உரியவரிடம் சென்று சேர்ந்துவிடும் என்று நம்புகிறோம்.

அவ்வளவு ஏன்?

நாம் உண்ணும் உணவிடம் கூட அது நம்மை எதுவும் செய்துவிடாது. நம் பசியையும் தீர்க்கும் என்று நம்பித்தான் உண்ணுகிறோம்.

எதையும் கண்ணால் பார்த்த பிறகும் முற்றாக உணர்ந்த பிறகும் தான் நம்புவேன் என்றால் இந்த உலகத்தில் ஒரு விஷயம் கூட நடைமுறை சாத்தியமில்லை.

எதுவுமே நடக்காது. நம்பிக்கை - நம்பிக்கை... இது இல்லாவிட்டால் வாழ்வே - வாழ வழியுமில்லை?

காபி பார்!

வின்சென்ட்டும் கேசவனும் காபி குடிக்க வந்திருந்தனர். கேசவனிடம் பெரிதாய் சுரத்தே இல்லை.

''என்னடா... உன் பாட்டி சொன்னது உன் காதுல ஒலிச்சிகிட்டே இருக்கா...?''

''ஆமாம் வின்சென்ட். பாட்டி ரொம்ப நல்லவ. அநாவசியமா எதையும் பேசவோ சொல்லவோ மாட்டா...''

''அப்ப உன் பாட்டி பேச்சை கேட்கற முடிவுக்கு வா.''

''அதுவும் முடியலியே... கிட்டதட்ட அஞ்சாயிரம் சதுர அடில கட்டப்பட்ட வீடு. அதுவும் கருங்கல்லால கட்டப்பட்ட வீடு. சுதந்திரம் கிடைச்ச சமயத்துல என் தாத்தா சந்தோஷமா கட்டின வீடு. அப்பவே இந்த வீட்டுக்கு லட்சம் ரூபாய் செலவாச்சாம். அப்ப இன்னிக்கு கணக்கு போட்டுப்பார்...''

''சரி... இன்னிக்கு என்ன விலைக்கு போகும்?''

''நிச்சயம் ஐம்பது லட்சம் போகும்.''

''சரின்னு வித்துட்டு போறதுக்கென்ன - பாட்டிக்கு தெரிய வேண்டிய தேவையே இல்லையே...''

''அதுதான் அப்பாவோட திட்டமும், ஆனா என் தாத்தா சும்மா இல்லாம ஊர்ல சிலர் கிட்ட அந்த வீட்டை பத்தி சொன்ன சில விஷயங்கள்தான் இப்ப எங்களுக்கு இடைஞ்சலே...''

''அப்படி என்ன சொன்னார்?''

''நான் சொல்றது இருக்கட்டும். உன் கார்ல இப்பவே கருப்பூர் வரை போய்ட்டு வருவோமா?''

''நானே கேட்கணும்னு நினைச்சேன். நானும் அந்த வீட்டை பார்க்க விரும்பறேன். எனக்கு பிடிச்சிருந்தா நானே வாங்கிக்கறேன்.''

வின்சென்ட் ஒரு ஐ.டி. நிறுவனத்தில் மாதம் 60 ஆயிரம் சம்பளம் வாங்குபவன். அந்த தெம்பில் பேசினான்.

''வின்சென்ட்... நீ சொன்னதே எனக்கு பெரிய தெம்பா இருக்குடா..''

''சரி காபியை குடி... இப்பவே கிளம்புவோம். ஆமா அந்த கருப்பூர் இங்க இருந்து எவ்வளவு தூரம்?''

''விருது நகர் போய் அங்க இருந்து சிவகாசி நோக்கி போற வழில இடையில அந்த கிராமம் வரும்...''

''எப்படியும் ஒரு அறுபது கிலோ மீட்டர் தூரம் இருக்கும் இல்லையா?''

''ஆமாம்... சரி கிளம்புவோம்'' - வின்சென்ட் துரிதப்படுத்தினான்.

காபி ஷாப் வாசலில் அவனது மாருதி ஸ்விப்ட் காத்திருந்தது. இருவரும் ஏறிக் கொள்ளவும் பயணம் தொடங்கியது.

மதுரையில் இருந்து தெற்கு நோக்கிய நான்கு வழிச் சாலையில் பயணம். சாலைகள் செம்மையாக இருந்ததால் காரிடம் நல்ல ஆக்ரோஷம் வெளிப்பட்டது.

காருக்குள் இருவரிடமும் பேச்சும் தொடங்கியது.

''கேசவா உன் பாட்டி பயப்பட்றதுக்கு என்ன காரணம்?''

''ரொம்ப சிம்ப்பிள்... நான் விளக்கமாவே சொல்றேன் வின்சென்ட். எங்க தாத்தா பாட்டியோட பூர்வீக கிராமம்தான் கருப்பூர். அந்த ஊர்ல கருப்பச்சாமி தான் எல்லாரும் கும்புட்ற தெய்வம். ஊருக்குள்ள நுழையும் போதே கண்மாய் கரைல பெரிய ஆலமரத்தடியில நிறைய அரிவாள் நடப்பட்டிருக்கும். அந்த அரிவாள்தான் அங்க கருப்புச்சாமி...''

''அரிவாள்தான் கருப்பா... அப்ப கருப்புக்கு உருவ வடிவம் கிடையாதா?''

''கருப்பச்சாமிக்கு மட்டும் உருவம் கிடையாது. அவர் காத்தா ஊருக்குள்ள நடமாட்றதா சொல்வாங்க.''

''காத்தா.. யூ மீன் விண்ட்?''

''ஆமாம்.. காத்துதான். காத்துதான் அவர் வடிவம்.''

''இது ரொம்ப வித்யாசமாகவும் புதிராவும் இருக்கே?''

''ஆமாம் இதுதான் கருப்பூர்ல நிலவற நம்பிக்கை...''

''சரி இந்த கருப்பச்சாமிக்கும் உங்க தாத்தாவுக்கும் என்ன கனெக்ஷன்?''

''அதை கேட்டா நீ நம்புவியோ மாட்டியோ...?''

''இப்ப நீ சொன்ன மத்த விஷயமெல்லாமும் நம்பற மாதிரியா இருக்கு... அதை நான் கேட்டுக்கல?''

''வாஸ்தவத்துல கருப்பசாமிங்கறவர் விவசாய ஜனங்களுக்குத்தான் இஷ்ட தெய்வம். நாங்க பிராம்மணர்கள். எங்களுக்கு திருப்பதி, பழனின்னு தான் குலதெய்வம் இருக்கும். ஆனா இந்த ஊர்லயே பல தலைமுறையா நாங்க வாழ்ந்துட்டதால எங்க முன்னோர்களும் இந்த கருப்பச்சாமியை குலதெய்வமா ஏத்துக்கிட்டாங்க..''

''சரி... அப்புறம்?''

''அப்படி ஏத்துகிட்டதால சிவராத்திரிக்கு சிவராத்திரி கருப்பு கோவில்ல எங்க பூஜை இருக்கும். மத்தவங்க கருப்பசாமிக்கு ஆடு கோழி பலி கொடுத்தா எங்க முன்னோர்கள் பொங்கல் வச்சு வழிபாடு செய்வாங்க.''

''சரி... நீ மெயினான விஷயத்துக்கே வரலியே...''

''வரேன்... அப்படி ஒரு நாள் சிவராத்திரி சமயம் பூஜை நடந்தது. அப்ப ஊரே கோவில்கிட்டதான் இருந்தது. அதாவது ஒரு பத்தாயிரம் பேராவது இருப்போம்...''

''அடேயப்பா - அவ்வளவு கூட்டமா?''

''அதான் சிவராத்திரி பூஜைக்கான சிறப்பு. அப்படி பூஜை நடந்தப்ப என் வயது ஒரு அஞ்சோ ஆறோ...''

''சரி - விஷயத்துக்கு வா.''

''அப்படி ஒரு பூஜை நடக்கும்போது எங்க வீட்டுக்குள்ள யாரும் இல்லை. எல்லோரும் கோவில் கிட்ட இருந்தோம். என் கழுத்துல ஒரு செயின் இருந்தது. காதுலயும் கடுக்கன் கால்ல கொலுசு..''

''அதனால என்ன?''

''அதனால என்னவா..? அந்த சிவராத்திரி கூட்டத்துல என்கிட்ட இருந்த நகைக்காக ஒரு திருடன் என்னைக் கடத்திட்டான்!''

''அடக் கொடுமையே...''

''கொடுமைதான்... அந்த காலத்துல நகைக்காக குழந்தைகளை கடத்தறவங்க நகையை பறிச்சிகிட்டு குழந்தைகள ஆத்துலயோ குளத்துலயோ தூக்கிப் போட்டுட்டு போறதும் வழக்கமா இருந்தது.''

''என்ன கேசவா பயமுறுத்தறே?''

''பயமுறுத்தல... உள்ளதச் சொன்னேன். ஏன்னா அந்த திருடன் போலீஸ்ல பிடிபடும்போது கடத்தப்பட்ட குழந்தைகள் இவன்தான் என்னை கடத்தினான்னு காட்டிக் கொடுக்கக்கூடாது பாரு...''

''அந்த திருடங்களுக்கு குழந்தைகளை கொல்ற அளவுக்கு கல் நெஞ்சா?''

''இல்லேன்னா கொல்ற துணிவு வருமா...?''

''சரி உன் விஷயத்துல என்ன ஆனது... நீ அப்ப என்ன செஞ்சே?''

''எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை வின்சென்ட். ஆனா நான் என் வீட்டுக்கு ஒரே பிள்ளை. கல்யாணமான உடனேயும் நான் பிறந்திடலை. மூணு வருஷம் கழிச்சுதான் பிறந்தேன். அதனால என் தாத்தா பாட்டி எல்லோரும்

பதைச்சு போயிட்டாங்க. என் அப்பா போலீஸ்ல புகார் கொடுக்க கிளம்பினாராம். அப்ப என் தாத்தா அப்பாவை தடுத்து நிறுத்தி கருப்பசாமி அரிவாள் முன்னால கொண்டு போய் நிறுத்தி கருப்பனை வேண்டிக்கோ எல்லாம் நல்லபடியா முடியும்னு சொல்லியிருக்கார். ஆனா என் அப்பா அதை பெருசா எடுத்துக்கலை. என் தாத்தாவை பார்த்து, ''நீ கருப்பனை நம்பு... நான் போலீசை நம்பறேன்னு புறப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு போயிட்டார்...''

''சபாஷ்... இதுதான் சரியான ரூட்...''

''என்ன சரியான ரூட்... அப்புறம்தான் எல்லா சிக்கலும் ஆரம்பம் ஆச்சு...''

''எந்த வகைல?''

''என் காதுல கழுத்துல அப்ப போட்டிருந்த நகைகள் தங்கம் இல்லை. அவ்வளவும் ரோல்டு கோல்டு...''

''இதுல இப்படி ஒரு ட்விஸ்ட்டா...?''

''நடுவுல பேசாம முழுசா கேள்... நகைகளை உரசிப் பார்த்த திருடனுக்குக் கோபமான கோபம்... அவனுக்கோ பயங்கரமான பணத் தேவை. உடனே என்ன பண்ணியிருக்கான். எப்படியோ என்னோட வீட்டு போன் நம்பரை தெரிஞ்சிகிட்டு வீட்டுக்கு போன் பண்ணி பேசி அஞ்சு லட்ச ரூபாய் பணத்தை தந்தா என்னை உயிரோட விட்டுட்றதா சொல்லி டீல் போட்டுருக்கான்.''

''வழிப்பறித் திருடன் பிளாக் மெயிலரா மாறிட்டானா?''

''ஆமாம். போலீசும் என் அப்பாகிட்ட பணத்தை கொடுத்து முன்ன அனுப்பிட்டு பின்னாலயே என்ன கடத்தின திருடனை பிடிக்கறதுக்கு தயாரா இருந்தாங்க.

ஆனா இது அந்த திருடனுக்கு தெரிஞ்சு அவன் சொன்ன இடத்துக்கு வரலை. என் வீட்டுக்கும் போன் பண்ணி நீங்க போலீசுக்கு போனதால உங்க பையன் பிணம்தான் வீட்டுக்கு வரும்னு சொல்லிட்டான். அப்பதான் என் அப்பாவுக்கு ஒரு தப்பு பெரிய தப்பா மாறிட்டதும் தெரிஞ்சது. மொத்த குடும்பமே ஒப்பாரி வெச்சாங்க. அதேசமயம் போலீஸ்காரங்க, அவன் அப்படி எல்லாம் எதுவும் செய்ய மாட்டான். சும்மா பூச்சிகாட்டுவான்னு சொல்லி தைரியம் கொடுத்தாங்க. என்ன செய்யறதுன்னே தெரியாம எல்லாரும் கதறினப்போ என் தாத்தா நேரா கருப்பு கோவிலுக்கு போனார். டேய் கருப்பா நீ இருக்கறது நிஜம்னா என் பேரன் சிறு காயம்கூட இல்லாம நல்லபடியா திரும்பி வரணும். நீ என்ன செய்வியோ ஏது செய்வியோ தெரியாது. இல்லைன்னா நீ, இந்த அரிவாள், உன்னை காவல் தெய்வம்னு இந்த ஊரும் உலகும் சொல்றதுன்னு எல்லாமே பெரிய பொய்னு சொல்லி நல்லா எலுமிச்சம்பழம் சைசுக்கு கற்பூரத்தையும் கொளுத்திட்டார். அப்ப அங்க வந்த பூசாரி என் தாத்தாவை பார்த்து, "சும்மா ஒரு ரூபாய்க்கு கற்பூரம் வாங்கி கொளுத்திட்டா ஆச்சா... 'கருப்பனுக்கு நேர்த்திக்கடனா ஏதாவது செய்யறேன்னு சொல்லு - எதையுமே இழக்காம நீ கருப்பன்கிட்ட காரியத்த சாதிச்சுக்க பாக்கறியான்னு' கேட்டிருக்கார்.

உடனே தாத்தாவும் நான் என்ன செய்யணும்னு கேட்டுருக்கார். அது எனக்கு தெரியாது. ஆனா ஒண்ணு - நீ கொடுக்கறேங்கற ஒண்ணு உண்மைல பெருசா இருக்கணும். அப்பதான் கருப்பன் அசைஞ்சு கொடுப்பான். அதேசமயம் அவன் அசைஞ்சிட்டா உன் பேரன் நல்லபடியா வர்றதும் உறுதின்னு சொல்லவும், தாத்தாவுக்கு

என்ன செய்யறதுன்னே தெரியல... பூசாரியோ சிரிச்சுகிட்டே இருந்துருக்கார். தாத்தாவுக்குள்ள சட்டுன்னு ஒரு முடிவு.

பூசாரி என்கிட்ட எனக்குன்னு இருக்கிறது நான் குடியிருக்கிற வீடுதான். வேற எதுவும் எனது கைல கிடையாது. எங்க வீடும் வாசலும் விளங்கப் பிறந்த பிள்ளைதான் என் பேரன். அவன் எந்த பிரச்னையுமில்லாம திரும்பி வந்துட்டா என் வீட்டையே நான் கருப்பனுக்கு கொடுத்துட்றேன். ஆனா ஒண்ணு என் காலம் வரைக்கும் நான் இந்த வீட்லதான் இருப்பேன். இதுதான் என் நேர்த்திக்கடன்னு சொல்லவும்.

சரி அப்படியே கற்பூரம் ஏத்தி சத்தியம் பண்ணிட்டு வீட்டுக்குப் போ... அடுத்த ஒண்ணே முக்கால் மணி நேரத்துல கருப்பன் உன் மகனை எங்க இருந்தாலும் கொண்டு வந்து சேர்ப்பான்னு சொல்லியிருக்கார். தாத்தாவும் சத்தியம் பண்ணிட்டு கிளம்பிட்டார்...

"அப்புறம்?"

"நீ நம்பினாலும் சரி.. நம்பலேன்னாலும் சரி... இந்த விஷயம் மட்டும் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... என்னை அந்த திருடன் பிடிச்சு வெச்சிருந்த இடத்துக்கு குதிரை மேல கைல அரிவாளோட ஒருத்தர் வந்தார்! அவரை பார்க்கவும் திருடன் அவர் கூட சண்டை போடப் போனான். ஆனா திருடனால முடியல. ஓங்கின கை அப்படியே நின்னுடிச்சு. அவர் என்னை தூக்கி குதிரை மேல தன் முன்னால வெச்சுகிட்டார். குதிரையும் புறப்பட்டுச்சு. அதுவரை அழுதுகிட்டிருந்த எனக்கு அந்த குதிரை சவாரி ஜாலியா இருந்தது."

- கேசவன் இந்த கட்டத்தை சொல்லும்போது வின்சென்ட் முகத்தில் ஒரு குறுஞ்சிரிப்பு.

''என்ன வின்செண்ட் சிரிக்கறே?'

''இல்ல... நீ காமிக்ஸ் கதை எல்லாம் அப்ப ரொம்ப படிப்பியோ?''

''டேய் நான் சீரியஸா பேசிக்கிட்டிருக்கேன். நீ என்னடா கிண்டலா கேட்கறே?''

''பின்ன என்னடா... குதிரைல ஒருத்தன் வந்தான் தூக்கிட்டு கிளம்பினான். ஜாலியா இருந்ததுன்னு பீலா விட்றே. இந்த காலத்துல யார்டா குதிரைல போறாங்க?''

''வின்செண்ட் நான் சொல்றது சத்தியம். உன்கிட்ட நான் பொய் சொல்லி எனக்கு என்ன ஆகப் போகுது?''

''சரி... அப்புறம் என்ன நடந்தது?''

''என்ன நடக்கும்? ஊர் எல்லைல என்னை அந்த நபர் இறக்கிவிட்டுட்டு பார்த்து வீட்டுக்கு போன்னாரு... நானும் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். என்னைப் பார்த்ததும் எல்லாருக்கும் ஒரே சந்தோஷம். அப்பதான் தாத்தா சொன்னாரு. ஒண்ணே முக்கால் மணி நேரத்துல என் பேரன் கிடைச்சிடுவான்னு பூசாரி சொன்னது பலிச்சிடிச்சின்னு...''

''அப்ப உன் தாத்தா வேண்டிகிட்டதுக்காக கருப்ப சாமியே குதிரைல வந்து உன்னை காப்பாத்திட்டாருங் கறே...?''

''ஆமா... அதுல இருந்து நானும் கருப்புன்னா பய பக்தியோட கும்பிடுவேன்...''

''நீதான் வேப்ப மரத்துல இருந்து அரச மரம் வரை எல்லாத்தையுமே கும்பிட்றவன் ஆச்சே. இதை சொல லணுமாக்கும்?''

''இதோ பார் வின்செண்ட்... அது எதுவா இருந் தாலும் சரி... அனுபவம்கிறது நிதர்சனமான விஷயம்.

உன் வாழ்க்கைலயும் நடந்தா நீயும் நிச்சயம் என்னை மாதிரிதான் நினைப்பே.''

''ஒருநாளும் அப்படி நினைக்க மாட்டேன்...''

''அப்ப குதிரைல வந்து என்னை காப்பாத்தினது யார்?''

''யாராவது வேட்டைக்காரனா இருக்கலாம். ஏன்னா அவங்க கிட்டதான் குதிரை இருக்க சான்ஸ் இருக்கு...''

''அந்த திருடன் கை ஓங்கினது ஓங்கினபடியே நின் னுச்சே! அது எப்படி?''

''சுளுக்குப் பிடிச்சிருக்கும். இதெல்லாம் ஒரு கேள்வியாடா. எது எப்படியோ காக்கா உட்கார பணம் பழம் விழுந்த கதையா உன் தாத்தா வீட்டை கொடுக்க றேன்னு வேண்டிக்கவும் நீ வந்து சேர்ந்தே... ஆமா உன் தாத்தா அப்புறம் வேண்டிக்கிட்ட மாதிரி அந்த வீட்டை கருப்பசாமிக்கே கொடுத்துட்டாரா?''

''பின்ன... அவர் உயிரோட இருந்தவரை அங்கதான் இருந்தார். அவர் இறந்து போகவும் பாட்டி எங்க கூட இங்க வந்துட்டாங்க. அந்த வீட்டுக்கும் கருப்பு வீடுன்னு பேர் உருவாகி அப்படியே இருக்கு.''

''அப்ப பத்திரமெல்லாம் உங்ககிட்டதான் இருக் குன்னு சொல்...''

''ஆமாம்... கருப்பசாமி கோவிலுக்குன்னு நிர்வாக அமைப்போ ஆபீசோ இல்லாததால் வீட்டை யார்கிட்ட ஒப்படைக்கிறதுன்னு தெரியலை. ஒரு பூசாரி மட்டும் இருந்தாரு. அவரும் அப்புறமா செத்துப் போயிட்டாரு...''

''அப்ப கருப்பசாமியே இப்ப அம்போன்னு கிடக் கிறார்னு சொல்.''

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை. பழைய பூசாரி யோட மகன் வந்து பாத்துக்கறார். என்ன ஒண்ணுன்னா

அவர் எப்பவும் கோவில்லயே இருப்பார். இவர் அப்படி இல்லை. ஒரு நாளைக்கு ஒரு வேளை வந்து விளக்கு ஏத்தி வெச்சி பூஜை பண்ணிட்டு போயிடுவார்...''

கேசவன் சொன்னதைக் கேட்டு திரும்பவும் சிரித்தான் வின்சென்ட்.

''வேண்டாம் வின்சென்ட் அப்படி சிரிக்காதே...''

''சரி நீ இப்ப என்ன பண்ணப் போறே?''

''என்ன பண்ணப் போறேன்னா - தங்கை கல்யாணத்துக்கு பணம் வேணும். கைல இருக்கற ஒரே பிராப்பர்ட்டி அதுதான். அதை கருப்பச்சாமி சொத்தா விட்டு வெச்சாலும் அதை பயன்படுத்த ஆட்கள் இல்லை. ஆகையால் கருப்பசாமிக்கிட்ட வேண்டிகிட்டு அந்த வீட்டை விக்கற முடிவுக்கு வரதை தவிர வேறு வழி எனக்கும் இல்லை.''

''நல்ல முடிவு. யாரோ ஒரு ராவுத்தர் வாங்க தயாரா இருக்கார்னு சொன்னே இல்ல?''

''ஆமாம்... ஆனா அவரும் ஊர்ல பேசிக்கிறத கேட்டுட்டு யாராவது அங்க ஒரு மாசம் தங்கி இருந்து காட்டினா அதை பாழடைஞ்ச வீடு இல்ல, வாழற வீடுன்னு நினைச்சு வாங்கிக்கிறேன்னு சொல்லிட்டார்.''

''டோன்ட் ஒர்ரி... ஒருவேளை அவர் வாங்கிக்கலேன்னாலும் பரவாயில்ல. நான் வாங்கிக்கறேன். உனக்கும் உதவி செய்த மாதிரி இருக்கும். எனக்கும் வீடு வாங்கின மாதிரி இருக்கும்...''

''இல்ல வின்சென்ட்.... எனக்காக நீ சிரமப்படாதே.''

''சிரமமா... இதுல எனக்கென்ன சிரமம் இருக்கு?''

''இல்ல... நான் என்ன சொல்ல வந்தேன்னா...?''

''என்ன சொல்ல வந்தே?''

''ஒரு பக்கம் அதை விக்கிறதுதான் ஒரே வழி... இன்னொரு பக்கம் அதை விக்க எனக்கு பயமாகவும் இருக்கு...''

''இப்படி பேச உனக்கே முட்டாள்தனமா இல்லையாடா?''

''இல்லடா.. என் தாத்தா எனக்காக வேண்டிகிட்டார். நானே அதை மீற வேண்டியிருக்கேன்னு பாக்கறேன்.''

''பைத்தியக்காரா... என்னமோ கருப்பச்சாமின்னு ஒண்ணு நிஜமா இருந்து, அது கைலயே சொத்தை ஒப்படைச்சிட்டு இப்ப அதை தட்டிப் பறிச்சுக்கற மாதிரி பேசறே...

உன் தாத்தா ஏதோ அசட்டு நம்பிக்கைல அன்னிக்கு அப்படி நடந்துகிட்டா இன்னிக்கு நீ அதை ஃபாலோ பண்ணணுமா?

''அதை நீ அசட்டு நம்பிக்கைன்னா சொல்றே?''

''வேற என்னன்னுடா சொல்ல... கடவுளுக்கு எதுக்குடா வீடும் வாசலும்? இல்லை அவர்தான் கேட்டாரா? சும்மா இல்லாம ஒரு பூசாரி ஏத்தி விட்டாரு - உன் தாத்தாவும் ஏறிட்டாரு... இவ்வளவுதான். இதுல இருக்கற விஷயம்.'' - வின்சென்ட் சளைக்காமல் பதில் கூறினான்.

ஆனாலும் கேசவன் நெற்றியில் விழுந்த சலனம் நீங்கவேயில்லை.

''என்ன யோசனை?''

''ஒண்ணுமில்ல...''

''நாம இப்ப அந்த கருப்பூருக்கு போறோம் - அந்த வீட்டையும் பாக்கறோம்...''

''போய்த்தானே ஆகணும். அப்பாவும் அம்மாவும் தான் அங்க தங்கற முடிவுக்கு வந்துட்டாங்களே...?'' - கேசவனின் குரலில் சுரத்தே இல்லை.

3

'மனித மனத்தின் நம்பிக்கைகளை ஆராய்ந்து பலர் பல புத்தகங்கள் எழுதியுள்ளனர். அதில் பல அற்புதமான எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி யான கருத்துக்கள் பல உண்டு. அதில் மிக பிரபல மான ஒரு கருத்து, நீ எதை மிக மிக விரும்புகிறாயோ அது ஒரு நாள் உனக்கு கிடைத்துவிடும் என்பது தான். இந்த கருத்து எல்லோருக்கும் பிடித்த கருத்து. ஆனால் இதில் பெரிய அளவில் உண்மை இல்லை என்கிற விமர்சனங்களும் எழுந்தன.

ஒரு எண்பது வயது பெரியவர் நினைவு தெரிந்த நாளில் இருந்து நான் நிலவுக்கு செல்வது போலவும், அங்கே உலாவித் திரிவது போலவும் கனவு கண்டு வருகிறேன். அந்த ஆசை நிறைவேறாமலே தான் நான் சாகப் போகிறேன். என் வரையில் மிகவும் ஆசைப்படும் ஒன்று கிடைத்துவிடும் என்பது பொய் என்றார்.

ஆனால் அவரை கவுன்சிலிங் செய்த ஆய்வாளர் அவர் சுற்றிலிருந்து ஒரு பெரும் உண்மையை கண்டறிந்தார். அவர் நிலவில் நடமாடுவது போல ஆசைப்பட்டதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால் அவர் ஆசைப்படும் போதே எப்படி ஆசைப்பட்டார் என்றால் நிலவுக்கு மனிதர்களால் போக முடியாது. அது இன்னொரு கிரகம். கற்பனையாக மட்டுமே நிலவு குறித்து நாம் எதையும் செய்ய இயலும். எனவே நாமும் கற்பனையில் திளைப்போம் என்று ஒரு அடிப்படையான எண்ணத்தின் மேல்தான் கற்பனை செய்தார். அதாவது நிலவையே அவர் ஒரு பொய்யாகத்தான் கருதினார். அதனால்தான் அவர் ஆசையும் பொய்யாகிவிட்டது! என்று.

இதைக் கேட்ட ஒருவர் திருப்பிக் கேட்டார். 'சரி... நான் நிஜமாக ஆசைப்படுகிறேன் என் வாழ்வில் அது ஈடேறிவிடுமா?' என்று கேட்டார்.

அதற்கு ஆய்வாளர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

விருதுநகர் நான்கு வழிச் சாலையில் இருந்து இடப் பக்கம் திரும்பி சிவகாசி செல்லும் வழக்கமான தார்ச் சாலையை வின்சென்டின் கார் எட்டியது. சாலையோரமாக இளநீர் கடை ஒன்று...

அந்தக் கடையை பார்த்தவுடன் காரை நிறுத்திவிட்டு இரண்டு இளநீர் வெட்டச் சொன்னான் வின்சென்ட்.

கேசவன் கருப்பு குழப்பத்திலேயே இருந்தான்.

''டேய் இளநீர் குடிடா...'' என்று ஒரு வெட்டிய இளநீரை நீட்டினான் வின்சென்ட். தானும் குடித்தான். ஐம்பது ரூபாயை தந்தபோது,

''சரியா போச்சு'' என்றார் கடைக்காரர்.

வின்சென்ட்டுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

''என்ன சார்... ஒரு இளநீர் இருபத்தஞ்சு ரூபாயான்னு மலப்பா இருக்குதா?''

''மலப்பல்லாம் இல்லை. இப்பவாச்சும் இயற்கை யான இந்த தண்ணிக்கு நல்ல விலை வந்துச்சேன்னு நினைச்சு சந்தோஷமாதான் இருக்கு...''

கடைக்காரர் முகத்தில் வியப்பு - இப்படி ஒரு பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை.

''சாமி - எங்க கஷ்டம் தெரிஞ்சு பேசறீங்க?''

''புரிஞ்சு பேசறேன்னும் சொல்லலாம். அழுக்கில் லாத தண்ணியே லிட்டர் பதினைஞ்சு ரூவா விக்குது... இதுல வெளிநாட்டுக்காரனோட பெப்ஸி, கோக்குங்குற சமாச்சாரங்கள் வேற... எட்டணாக் கூட பெறாத ஒரு பாட்டிலை பத்து பதினைஞ்சு ரூபாய்க்கு விக்கறாங்க. அதை வாங்கிக் குடிக்கற நம்பள தவிர அவ்வளவு பேருக் கும் லாபம். விக்கற கடைக்காரன் - கொண்டு போட்ற வேன்காரன், விளம்பரப் படத்துல நடிக்கிற தோனி, டெண்டுல்கர்னு அவ்வளவு பேருக்கும் காசு. ஆனா நமக்கு மட்டும் லாசு.''

- கொஞ்சம் ராஜேந்தர்தனமாக வின்சென்ட் பேசினா லும் எதையும் முற்போக்காகப் பார்ப்பவன், சிந்திப்பவன் அவன் என்பது கடைக்காரருக்கு புரிந்தது.

''உங்கள போல எல்லாரும் யோசிச்சா ரொம்ப நல்லா இருக்கும் சாமி...'' என்று சிரித்தான். ஆனால் கேசவன் காதில் இந்தப் பேச்செல்லாம் விழவேயில்லை. அப்போது தான் பைக்கில் ஒருவரும் இளநீர் குடிக்க வந்தார்.

வந்தவர் கேசவனைப் பார்க்கவும் நெற்றியை சுருக் கினார். பின் பேச ஆரம்பித்தார்.

''தம்பிய எங்கையோ பார்த்தது போல இருக்கே?''

''என்னையா?'' - கேசவனும் கேட்டான்.

''ஆமாம்... ஜாடை எல்லாம் அப்படியே ராஜாராம் அய்யர் மாதிரியே இருக்கு...''

''அவர் எங்க அப்பாதான்...''

''ஓ... அப்ப கருப்பு வீட்டய்யர் மவன்னு சொல் லுங்க.'' - அவர் கருப்பு வீட்டய்யர் என்றது கேசவன் மனதில் சுருக்கென்று தைத்தது. வின்சென்ட்டும் அதை கவனித்தான்.

''ஆமா எங்க தம்பி ஊருக்கு வராம இங்க நின்னுட் டீங்க?''

''ஏம்ப்பா நீதான் இங்க இளநீர் குடிக்க வருவியா - தம்பி வரக்கூடாதா?'' கடைக்காரர் பதில் தந்தார்.

''அப்புறம் அப்பா அம்மாவெல்லாம் நல்லா இருக் காங்களா...''

''உம்... அவங்கள்ளாம் சௌக்யம்...''

''ஏதோ திரும்ப கருப்பூருக்கே வரப்போறதா ஒரு பேச்சு காதுல உழுந்திச்சி.. நெசமா..?''

''ஆ... ஆமாம்... உங்களுக்கு எப்படித் தெரியும்...?''

''உங்க அப்பாதான் நம்ம போஸ்ட்மாஸ்டர் அய்ய ருக்கு போன் பண்ணி சொல்லியிருக்கார் போல - நான் போஸ்ட் ஆபீஸ் போனப்ப காதுல உழுந்திச்சு.''

''ஆமாம்...''

''எல்லாரும் கிராமத்தை விட்டு நகரத்துக்கு போகும் போது நீங்க கிராமத்துக்கு வர்றது புது விசயம் தம்பி... ஆனா உங்களுக்கு தோதா இப்ப கிராமத்துல வீடு வாடகைக்கு கிடைக்கறதுதான் கொஞ்சம் கஷ்டம்.''

அவர் அப்படி சொன்ன மறுநொடியே கேசவன் முகம் விகாரமாக மாறியது.

''அதான் இவங்களுக்கின்னு வீடு இருக்குதே - அப்புறம் எதுக்கு வாடகை வீடு?'' - வின்சென்ட் திருப்பி கேட்டான்.

''என்னது... உங்க வீட்டுக்கேவா வரப் போறீங்க?''

''ஆ... ஆமாம்...''

''அதத்தான் உங்க தாத்தா கருப்பசாமிக்கு தத்தம் பண்ணிக் கொடுத்துட்டாரே...?''

''அது.. அது'' - கேசவனுக்கு அந்த கேள்விக்கு பதில் கூறத் தெரியவில்லை. தடுமாறினான்.

''மிஸ்டர் மோட்டார் பைக்... இவங்க தாத்தா கருப்ப சாமிக்கு தத்தம் பண்ணிக் கொடுத்ததை நீங்க பார்த்தீங் களா?'' - வின்சென்ட் சற்று ஆவேசமாகக் கேட்டான்.

''நீங்க யார் தம்பி?''

''இவனோட நண்பன்.''

''அதான் புரியாம பேசறீங்க?''

''என்ன புரியாம பேசறேன். என் கேள்விக்கு பதில் சொல்லுங்க. நீங்க பார்த்தீங்களா?''

''இது என்ன தம்பி கேனத்தனமா கேட்டுகிட்டு... இவங்க தாத்தா நேர்ந்துகிட்டதைத்தான் நான் அப்படி சொன்னேன்.''

''சரி... நான் அதுக்கு இப்ப பதில் சொல்றேன். நல்லா கேட்டுக்குங்க... தாத்தா பைத்தியக்காரத்தனமா வேண்டிக் கிட்டா அதுக்கு பேரன் கட்டுப்படணும்கற அவசியம் கிடையாது. இது அவங்க வீடு. அந்த வீட்ல இவங்க குடி இருப்பாங்க. ஆடுவாங்க - பாடுவாங்க. அதை வேற ஒருத்தருக்கும் விக்கவும் செய்வாங்க. இப்பகூட விக்க தான் போறாங்க. அதுக்கு தான் வந்துருக்கோம். நானே கூட அந்த வீட்டை வாங்கலாம். இதான் மேட்டர். இவ்வளவு போதுமா - இல்லை இன்னும் வேணுமா?'' வின்சென்ட் வெளுத்துக் கட்டினான்.

மோட்டார் பைக்காரர் முகம் இருளடைந்து போய் விட்டது. மௌனமாக எதுவும் பேசாமல் இளநீரை குடித்துவிட்டு காசையும் கொடுத்துவிட்டு பைக்கோடு ஒதுங்கிப்போனார். இளநீர் கடைக்காரர் வின்சென்ட்டை ஒரு மாதிரி பார்த்தார்.

''என்னன்ணே... நீங்க ஏன் ஒரு மாதிரி பாக்கறீங்க?''

''நீங்க பேசுனதக் கேட்டா கருக்குன்னு இருக்கு தம்பி...''

''அப்படின்னா?''

''விபரம் புரியாம பேசற மாதிரி இருக்குதுன்னேன்...''

''நீங்க என்ன சொல்லப் போறீங்க... சொல்ல வேண் டியத சொல்லுங்க...''

''கருப்பூர் கருப்பச்சாமி ரொம்ப துடியான தெய்வம். அதுகிட்ட வாக்கு கொடுத்தா மீறக்கூடாது தம்பி...''

''அப்படியா?''

''ஆமாம் தம்பி... இப்பவும் தன் பக்தர்களுக்கு ஒண்ணுன்னா குதிரை மேல ஏறிகிட்டு வர்ற கண்கண்ட தெய்வம் அவர்.''

''ஓ...''

''நான் ரொம்ப நல்லெண்ணத்துல சொல்றேன். பாத்து நடந்துக்குங்க...'' - இளநீர் கடைக்காரர் குரலில் நிஜமாலுமே அக்கரை தெரிந்தது. அது வின்சென்ட்டை விட கேசவனை அதிகம் பாதித்தது.

''வின்சென்ட் கார்ல ஏறுடா.. நாம ஊருக்கே திரும்பிப் போவோம்...'' என்றான்.

''அடப்போடா கூறு கெட்டவனே - எனக்கு இவங் கல்லாம் இப்படி சொல்லச் சொல்லதாண்டா ஆர்வம் அதிகமாகுது. எந்த காலத்துல இருந்துகிட்டு என்னடா பேசறே? உன் வீட்ல டி.வி.ன்னு ஒண்ணு இருக்குதானே?''

''இப்ப எதுக்குடா டி.வி.கிட்ட போறே?''

''பேசாம... அதுல எவ்வளவு சேனல்கள் - குறிப்பா ஜியாக்ரஃபி சேனல், அனிமல் பிளானட், டிஸ்கவரி இதை எல்லாம் நீ பார்ப்பியா மாட்டியா?''

''எல்லாத்தையும் கார்ல போகும்போது பேசிக்க லாம், ஏறுடா...''

''கார்ல போகத்தான் போறோம் - கருப்பூருக்கு -

குறிப்பா உன் வீட்டுக்கு...'' - ஆவேச பதிலோடு காரில் ஏறிக் கொண்டவன் காரையும் வேகமாக்கினான்.

இளநீர்காரரின் அரிவாள் அப்போது தவறி அவர் காலில் பட்டு ரத்தம் தெரித்தது.

''ஐயோ சாமி... இங்கேயே நீ உன் கோபத்தை காட்ட ஆரம்பிச்சுட்டியா?'' - என்று பதைத்தது அவன் மனது.

4

நான் நிஜமாலுமே நிலவுக்கு போக விரும்புகிறேன் - ஈடேறுமா என்று கேட்டவரிடம் ஆய்வாளர் சிரித்துக் கொண்டே பதில் கேள்வியைக் கேட்டார்.

''இந்த ஆசை நிஜமாலுமே வந்தது போல் தெரியவில்லையே?''

''இல்லை, நிஜமாக மனதாரதான் ஆசைப்படுகிறேன் என்றால், ஆசைப்படும் ஒன்றைப் பற்றி கொஞ்சமாவது தெரிந்திருக்க வேண்டும். உங்களுக்கு நிலவை பற்றி என்ன தெரியும்?''

''இது என்ன கேள்வி... நிலவு ஒரு அழகான கிரகம். அது வானில் உள்ளது. இதற்கு மேல் என்ன தெரிய வேண்டும்?''

''தவறு... அது அழகிய கிரகம் என்பது ஒரு மாயை. அது ஒளியைச் சிந்துவதாக கருதுவதும் மாயை. உண்மையில் நிலவில் மனிதன் வசிக்கத் தேவையான ஆக்ஸிஜன், தண்ணீர் மற்றும் நெருப்பு என்று எதுவும் இல்லை. ஆய்வாளர்கள் நிலவை பார்த்து மயங்கி ஒரு பிக்னிக் போவது போல அங்கே போய் வரவில்லை. அவர்கள் நோக்கம் ஆராய்வது... அதற்காக போய் வருகிறார்கள். இதுதான் நிலவின் உண்மையான பின்புலம். இது தெரியாமல், அங்கு போய் வர விரும்புவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?''

- அவர் திருப்பிக் கேட்டார். பின் அழுத்தமாக கூறத் தொடங்கினார்.

''உண்மையில் ஆசை வைப்பது என்பது புரிந்த ஒன்றாக இருக்க வேண்டும். ஒரு ஆணாக இருந்து கொண்டு நான் கர்ப்பம் தரித்து பிள்ளை பெற விரும்புகிறேன்'' என்று எப்படி ஆசைப்பட முடியாதோ அப்படி அனர்த்தமான விபரீத ஆசைகள் கூடாது. அவை முட்டாள் தனமானவை. அவை எந்த நாளும் ஈடேறாது. அதை வைத்து என் நம்பிக்கை மோசம் போய்விட்டது என்று கருதிவிடக் கூடாது.

ஒரு மனிதனால் அவனது சக்திக்கு அடைய முடிந்த எந்த ஒன்றின் மேலும் ஆசை வைக்கலாம். ஆசை வைத்தால் மட்டும் போதாது. அந்த ஆசைக்காக பாடுபட வேண்டும். அப்படிப் படும் பாடும் அறிவுப்பூர்வமாக இருக்க வேண்டும். அப்படி இருக்கும்பட்சத்தில் அந்த ஆசை எதுவாக இருந்தாலும் அது ஒரு நாள் ஈடேறியே தீரும். அப்படித்தான் இதுநாள் வரையிலும் நடந்தும் வந்திருக்கிறது'' என்றார் அவர்.

கருப்பூர் என்கிற பெயர் பலகையின் வரவேற்போடு வின்சென்ட்டின் கார் ஊருக்கான மண்சாலையில் பிரவேசித்தது. கேசவன் இறுக்கமாக உட்கார்ந்திருந்தான்.

''டேய்... சந்தோஷமா இருடா. இப்ப நாம் வந்துருக்கறது உன் ஊருக்கு. யாரா இருந்தாலும் பிறந்த இடத்தை பார்க்கும்போது ஒரு சந்தோஷம் இருக்கும்... தெரியுமா?''

''அப்படி சொல்லாதே வின்சென்ட்... சிலரோட

இளம்பிராயம் மோசமானதா இருந்தா அதை நினைச்சு பார்க்கவே பிடிக்காது.''

''கேசவா... எதையும் எப்படி யோசிக்கறோம்கறதுல தாண்டா இருக்கு. இதுக்குதான் நிறைய புத்தகம் படிக்கணும்கறது...''

''என் அம்மாவும் அப்பாவும் கூடதான் புத்தக புழுக்கள்... அவங்களுக்கும் கருப்புன்னா பயம்தான்... தெரிஞ்சுக்கோ...''

''டேய்... கல்கி குமுதம் கலைமகள் படிச்சா புத்தக புழு கிடையாதுடா. எல்லா புத்தகமும் படிக்கணும். இயேசு அழைக்கிறார் நோட்டீஸ்ல இருந்து டால்ஸ்டாய், செகாவ், ஷெர்லக் ஹோம்ஸ், நீலபத்மநாபன் எஸ். ராமகிருஷ்ணா, ராஜேஷ் குமார், பி.டி. சாமின்னு எல்லாம் படிக்கணும். படிச்சா மட்டும் போதாது. அதை அசை போடணும். அப்படியே வாழ்க்கையோட பொருத்திப் பாக்கணும். எல்லாத்துக்கும் மேலா நம்பளையே நாம புரிஞ்சு வெச்சிக்கறதும் முக்கியம்.

தன்னையே தெரிஞ்சிக்காத ஒருத்தன் எதை தெரிஞ்சி வெச்சிருந்தும் பிரயோஜனமில்ல.'' - வின்செண்ட் பேசுவதில் இருந்து அவனுக்கான தெளிவு, தைரியம் அனைத்துக்கும் ஒரு அடித்தளமாக அவன் நிறைய வாசிப்பதும் ஒரு காரணம் என்பது தெரிந்தது.

அப்போது கண்மாய் கரையும் - கரையோர ஆலமரமும் - அந்த மரத்தின் கீழான கருப்பு கோவிலும் கண்ணில் பட்டது. அங்கே சிலரும் இருந்து வழிபட்டபடி இருந்தனர்.

''டேய்... இதுதானே நீ சொன்ன கோவில்...''

''ஆமாம் - நிறுத்து - ஊருக்குள்ள நுழையற யாரும் கருப்பை கும்பிடாம போக மாட்டாங்க.''

''நிறுத்தறேன் - ஆனா கும்பிட்றதுக்காக இல்ல. பாக்கறதுக்காக...'' - வின்செண்ட்டும் காரை நிறுத்தினான். இருவருமாக இறங்கினர். காரில் இருந்து இறங்கி இரண்டு பேர் வருவதை சாமி கும்பிட வந்திருந்தவர்களும் பார்த்தனர். அவர்களில் ஒருவர் கையில் கோழி ஒன்று இருந்தது. பூசாரியும் இருந்தார். அவருக்கு கேசவனை அடையாளம் தெரிந்தது.

''அடடே... அய்யர் மவனா?'' - என்று வரவேற்றார்.

''நல்லா இருக்கீங்களா பூசாரி...''

''ஏதோ ஓடிகிட்டிருக்கு... கருப்பு புண்ணியத்துல.''

''சந்தோஷம் - கற்பூரம் காட்டுங்க.''

''ஆமா எங்க இந்த பக்கம் - உங்க அப்பா அம்மால்லாம் கூட வரப்போறதா கேள்விப்பட்டேன். பழையபடி நம்ம ஊர்லயே இருந்துடலாம்கற முடிவா?''

''ஆமாம்... நீங்க கற்பூரம் காட்டுங்க. நான் கிளம்பறேன். நிறைய வேலை இருக்கு...''

''இருங்க தம்பி... இவுக கோழி அடிச்சி கும்புட வந்துருக்காங்க. இதை முடிச்சிட்றேன். நீங்க அய்யமார்... நான் கோழி அறுக்கறத பார்த்தா என்னவோ போல இருக்கும். அப்படி போய் நில்லுங்க...''

''நிக்க நேரமில்ல - விபூதிதாங்க போதும்...'' - கேசவன் பரபரத்தான். குனிந்து அவனே கற்பூரத் தட்டில் இருந்த மொரமொரப்பான விபூதியையும் எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டான். நின்று எலுமிச்சம் பழம் செருகிய அரிவாளைப் பார்த்து கும்பிட அவனுக்கு என்னவோ போல் இருந்தது. குற்ற உணர்வு!

ஆனால் வின்செண்ட் படுஜாலியாக இருந்து நடப்பதை பார்த்தான். ''கருப்பசாமிக்கு கோழின்னா ரொம்ப

இஷ்டமா?'' என்று கொஞ்சம் போல கிண்டலாகவு கேட்டான்.

''தம்பி யாரு?''

''கேசவனுக்கு ஃப்ரெண்ட்''

''யாரா இருந்தாலும் இங்க பயபக்தியா இருக்கணும்.

''இல்லாட்டி...''

''ஒழுங்கா ஊர் போய் சேர முடியாது...''

''இப்படி மிரட்டிப் பாக்கறதுதான் கருப்பு ஸ்டைலா?

''அய்யர் தம்பி... யார் இவரு - எதுக்காக இப்ப ஏட்டிக்கு போட்டியா பேசறாரு..?''

''சாரி பூசாரி - இவன் கொஞ்சம் ஜோவியல் டைப் தப்பா எடுத்துக்காதீங்க... டேய் வின்செண்ட் புற படுடா... உன் கூட நான் இன்னிக்கு ஊருக்கு கிளம்பினதே தப்புடா...''

''எல்லாம் விதியின் செயல் மகனே... விதியி செயல்...''

''விதிதான் - வா முதல்ல...'' - அவனை இழுத்து கொண்டு காரை நோக்கி நடந்து கதவை திறந்து டிரைவி சீட்டில் அவனைத் தள்ளியும் விட்டான்.

அதற்குள் கோழியின் தலையை அறுத்து தலை ஒரு பக்கமும் உடம்பை மறுபக்கமும் வீசியதில் தலை பாகம் காரின் பானட் மேல் வந்து விழுந்து ரத்தமு தெரித்தது.

ஒரு வினாடி உடம்பை உதறிக் கொண்டான் கேசவன்.

''பயந்துட்டியா... ப்பாவம்டா கோழி... மனுஷங் இருக்கற இந்த பூமியில அது பொறந்துருக்கவே கூடாது கடைசில பாத்தியா அதோட நிலையை'' என்று கிண் லாக கேட்டபடியே காரை ஸ்டார்ட் செய்தான்.

அப்போதுதான் கேசவனும் காரின் முகப்பு கண்ணாடியை கவனித்தான். அதில் கோழி ரத்தம் ஒரு அரிவாள் போலவே சிந்தியிருந்தது.

பகீர் என்றது!

* * *

கேசவன் வீட்டுக்குள் பாட்டி பங்கஜத்திடம் ஒரே புலம்பல்.

''கேசவா... கேசவா...'' என்று. பொறுமை இழந்தவராக எழுந்து சென்றார் ராஜாராமன்.

''ஏம்மா இப்படி கேசவா கேசவான்னு உயிரை எடுக்கறே?''

''நான் உயிரை எடுக்கறேனா... பாவி - உயிரை காப்பாத்த துடிக்கறேண்டா - எங்கடா இப்ப அவன்?''

''வெளியே போயிருக்கான்... இப்ப என்ன அவனுக்கு...?''

''அவன் வெளிய போயிருக்கான் சரி... வெளிய எங்க போயிருக்கான்?''

''அது எனக்கு தெரியாது.''

''பொய் சொல்றே... அவன் நம்ப ஊருக்கு போயிருக்கான். கருப்பன் சன்னதில இப்ப இருக்கான்.''

''சரி... இப்ப அதுக்கென்ன?''

''என்னவா? - அங்க அவன் நம்ப மண்ணுல கால வைக்கவும் இங்க என் நெஞ்சுல யாரோ மிதிச்ச மாதிரி இருக்குடா. அந்த ஊருக்கே இனி யாரும் போகாதீங்க. அந்த சொத்து நமக்கு வேண்டாம்...''

''இதோ பார்... உன்கிட்ட கேட்கும்போது அபிப்ராயம் சொல்லு. நீயா பயந்துண்டு கண்டபடி உளறாதே.''

''உளறலை. நான் உள்ளத சொல்றேன். கருப்பனுக்கு சத்யம் பெருசுடா...''

''அது சரி... நான் எங்க கருப்பன்கிட்ட சத்யம் பண்ணேன். இல்ல கேசவன்தான் எங்க பண்ணினான். அப்பா பண்ணினார். அவர் இருந்தவரை அதை காப்பாத்தினார். அதோட முடிஞ்சு போயிடித்து எல்லாம்...''

''முடிஞ்சு போச்சுன்னா அப்புறம் எதுக்கு அந்த சொத்தை விக்க நினைக்கறே - அது நமக்கு சொந்தம் இல்ல, கருப்பன் சொத்து...''

''சரி... நானும் நீ சொல்றத ஒரு பேச்சுக்கு ஒத்துக்கறேன். இங்க சிந்துஜா கல்யாணம் நடந்தாகணும். பணம் தேவைப்பட்றது. யார் தருவா?''

''கருப்பனை நம்பிக் கேளுடா - தருவான். அவனை நம்பாம அவன் சொத்தை விக்கற தப்ப பண்ணாதேள்.''

''இது துவாபரயுகமில்லம்மா. கலியுகம். கடவுள் எந்த காலத்துல நேர்ல வந்துருக்கு. அதுகிட்ட போய் நாம கேக்க?''

''நாத்திகனாட்டம் பேசாதே ராஜாராமா... நம்பிக்கை ரொம்ப முக்கியம். கருப்பன் நிதர்சனமானவன். அவனால தான் உன் பிள்ளையே உனக்கு திரும்ப கிடைச்சான்.''

''சரிம்மா... நீ தொணதொணங்காம படுத்து தூங்கற வழிய பார். எங்களுக்கு கல்யாண வேலை தலைக்கு மேலே இருக்கு...''

''ராஜாராமா... நான் தொண தொணங்கலடா... மனுஷனுக்கு எப்பவும் நாக்கு பிசகக் கூடாதுடா. நம்பிக்கையும் ரொம்ப முக்கியம். உன் அப்பாவுக்கு இருந்த நம்பிக்கை உங்கிட்ட இல்லாம போச்சேடா?''

''இவ்வளவு சொல்றியே - அந்த கருப்பன்கிட்ட நீதான் பணத்தை கேட்டு வாங்கிக் கொடேன். அப்படி அவன் கொடுத்துட்டா நான் சத்யமா அந்த வீட்டை விக்காம பத்திரத்தையும் கொண்டு போய் அந்த கருப்பு கோயில் உண்டியல்லயே போட்டுட்றேன்...''

- ராஜாராமனும் விரக்தியாகத்தான் பேசினார். ஆனாலும் அதில் கொஞ்சம் போல் சுயநலம், புத்திசாலித்தனம் என்று எல்லாமே கலந்திருந்தது.

''கேக்கறேண்டா... கட்டாயம் கேட்கறேன்.''

''என்னத்த கேக்கறியோ... அந்த கருப்பசாமிய நாங்களும் தானே போய் கும்புட்றோம். நம்பளை எல்லாம் கேக்கற அளவுக்கா வைக்கறது?

மனுஷன்னா அவனுக்கு கொஞ்சமாவது பயம் இருக்கணும்னு அந்த காலத்துல இருக்கற பெரியவாள் ளாம் கண்டுபிடிச்ச ஒரு விஷயம்தான் கருப்பச்சாமி. அந்த அரிவாளுக்கு யோசிக்க தெரியாத குடியானவன் வேணா பயப்படலாம். படிச்ச நாமளும் பயப்பட்டா அது முட்டாள்தனம். இப்படி சொல்றதால நான் கருப்பசாமியை துவேஷிக்கிறதா நினைக்காதே. ஒரு கற்பூரம் ஏத்தி கன்னத்துல போட்டுக்க நான் எப்பவுமே தயார். மத்தபடி என் பசிக்கு நான்தான் சாப்பிடணும். என் தேவைக்கு நான்தான் வேலை செய்தாகணும். ஆகாசத்துல இருந்து எதுவும் மடில வந்து விழப் போறது கிடையாது. இதை தெரிஞ்சுக்கோ...'' - என்றவராக ராஜாராமன் அந்த அறையை விட்டு விலகினார்.

பங்கஜம் விழிகளில் ஊற்று போல் கண்ணீர் திரண்டுவிட்டது!

5

சில விஷயங்களை நம்புவதற்கு கஷ்டமாக இருக்கும். அதில் ஒன்று நாம் ஒருவரைப் பற்றி தீவிரமாக எண்ணி முடித்த சில நொடிகளில் அல்லது நிமிடங்களில் அவர் நம் எதிரில் வருவது!

எல்லோருக்குமே இந்த அனுபவம் ஏற்பட்டதுண்டு. சிலருக்கு எப்போதாவது நடக்கும் இந்த விஷயம், சிலர் வரையில் அடிக்கடி நடக்கும்.

இதை தற்செயல் என்பதா - இல்லை இதற்கு பின்னால் நாம் ஆராய்ச்சி செய்ய ஏதாவது உள்ளதா என்கிற கேள்வியும் எழுகிறது. இதை உளவியல் ரீதியாக ஆய்வு செய்திருக்கிறார்கள். அதற்கு முன் ஒருவரது மன அமைப்பு பற்றியும் மனம் என்றால் என்ன என்பது பற்றியும் தெரிந்து கொள்வது அவசியம்.

ஏனென்றால் இதை அறிந்து கொள்ளாமல் அதை அறியவே முடியாது. நம் எல்லோருக்குமே மனமானது மூன்று தளங்களில் அமைந்துள்ளது. மேல் மனது - மையமனது. ஆழ்மனது என்பதே அது. மேல் மனது என்பதில்தான் நாம் எப்போதும் காரியமாற்றியபடி உள்ளோம். இதில் மைய மனது என்பது சில முக்கிய செயல்பாடுகளை ஞாபகத்தில் வைத்திருந்து அதற்காக நம்மை தூண்டியபடி இருக்கும். உதாரணமாக இந்த தேதியில் எலெக்ட்ரிக் பில் கட்ட வேண்டும். இந்த கிழமையில் நண்பர் ஒருவரின் திருமணத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்பது போன்ற விஷயங்களாகும்.

ஆழ்மனதில் வாழ்வில் ஏற்பட்ட மறக்க முடியாத கசப்பான அனுபவங்கள் முதல் நிறைவேறாத ஆசைகள் வரை பல விஷயங்கள் ஒளிந்திருக்கும்.

இந்த மூன்று மனநிலையில் சமயங்களில் ஆழ் மனது விழித்துக் கொண்டு மேல் மனதோடு தொடர்பு கொண்டு செயலாற்றும். அப்போது தான் இப்படி நாம் நினைப்பதும் நடப்பதும் ஒன்றுபோல இருக்கும்.

இதை வைத்தே உளவியல் அறிஞர்கள் எண்ண அலைகளால் நாம் எவரையும் தொடர்பு கொண்டு, அவரது ஆழ்மனதோடு பேசி அவருக்குள் தாக்கத்தை யும் ஏற்படுத்த முடியும் என்றனர். இதை ஆய்வு ரீதி யாகவே கண்டறிந்தனர். இதற்காக பத்து பேர்களை தேர்வு செய்தனர். இவர்கள் மிக நெருங்கிய நண்பர் கள் - இருபது வருடங்களுக்கும் மேலாக பழகி வருபவர்கள்.

இவர்களை பிரித்து தனித்தனியே இருக்கச் செய்து பின் அவர்களிடம் நீங்கள் முதலில் யாரை சந்திக்க விரும்புகின்றீர்களோ அவர்கள் பெயரை ஒரு தாளில் எழுதித் தரச் சொல்லிவிட்டு அவர்களை தீவிரமாக நினைக்கச் சொன்னார்கள். அதாவது மனதுக்குள் பெயரை எழுதியவர் அந்த பெயருக்கு உரியவரையும் பெருவிருப்பத்தோடு அழைக்க வேண்டும். இப்படி அவர்கள் சொன்னது ஐந்து பேர் களிடம் ... மீதம் உள்ள ஐந்து பேர்கள் இவர்களை சந்திக்க வேண்டும். இவர்கள் மாறிக்கூட சந்திக்க இடம் இருக்கிறது.

அதாவது ஏ பி சி டீ ஈ என்னும் ஐந்து பேர் எஃப் ஜி எஃச் ஐ ஜே என்னும் ஐந்து பேரை ஏ-யானவர் ஜி-ஐயும், பி-யானவர் ஜே-யையும் சி-யானவர் எஃச்ஐ யும், டீ-யானவர் எஃப்-ஐயும், ஈ-யானவர் ஐ-ஐயும் தீவிரமாக நினைத்தனர். ஒரு ஆச்சரியம் போல பதிலுக்கு இவர்களும் தங்களை தீவிரமாக நினைத் தவர்களையே நினைத்து அவர்களை சந்தித்தனர்.

இந்த ஆய்வு 100% வெற்றியை தந்தது!

கருப்பூர் அக்ரஹாரம்!

இன்று யாரும் அக்ரஹாரத்தில் இல்லை.

பூசணிக் கொடிகளும், மல்லிகைக் கொடிகளு பரவிக் கிடக்கும் ஓட்டுக் கூரை வீடுகள்... கொல்லை புறத்தில் பசு மாடுகளும் முன்புறம் அகத்தி மரமும் அதி கட்டப்பட்டிருக்கும் பசுமாட்டு கன்றுக்குட்டிகளும் என் ஒரு காலத்தில் ஜே ஜே என்று இருந்த அக்ரஹாரப் பகுதி

இன்று அந்த நாளைய தடயம் போல சில வீடுக மட்டும் ஜன நடமாட்டத்தோடு இருக்க பல வீடுக முற்றிலும் உருமாறி அங்கே குட்டிக் குட்டி தொழிற்சாலை கள் தோன்றியிருந்தன.

ஒரு பிராம்மண வீடு மருந்துக் கம்பெனி ஆகியிரு தது. இன்னொன்று மினரல் வாட்டர் குடோன் ஆக மா யிருந்தது. ஒரு வீட்டில் ஐஸ் ஃபேக்டரி வந்திருந்தது கருப்பூரைச் சுற்றிலும் ஒரு பக்கம் விருதுநகர், இன்னொ பக்கம் சிவகாசி, இன்னொரு பக்கம் ராஜபாளையம் ஸ்ரீவில்லிப்புத்தூர் என்று நகரங்கள். அங்கே இருந் கொண்டு தொழில் செய்வது ஒரு விதம். இப்படி ஒதுங் இருந்து தொழில் செய்து வாகனங்கள் மூலம் சரக்குகளை கொண்டு சேர்ப்பது இன்னொரு விதம்...

தெருவில் வின்சென்டின் கார் நுழைந்தபோ கேசவனுக்கு ஜுலீர் என்றது.

''வின்சென்ட்... நான் ஓடியாடின வீதிடா... வீ நடுவுல ஒரு பெரிய வாதா மரம் இருக்கும். கொடுக்காபு மரமும் இருக்கும். அதுல கல்லெறிஞ்சு காய்களை பறிச் சாப்பிடுவோம். இப்ப மரத்தையும் காணோம், விளையா பசங்களையும் காணோம் பாத்தியா?'' - என்றான் மிக மி ஏங்கிய குரலில்...

''ஒரு கேவலமான மாற்றத்துக்குள்ள இப்ப இந்திய இருக்கு கேசவா... டி.வி. பாக்கறதும், செல்போன் பய படுத்தறதும் தான் இன்னிக்கு மனிதர்களோட முக்கியமா

செயல்கள்! குறிப்பா பள்ளிக்கூடம் போற பசங்க தெருவுல இறங்கி விளையாடறதே கிடையாது.

வீட்டுக்குள்ள நுழைஞ்ச உடனே சோபாவுல விழுந்துட்றாங்க. டி.வி.யை முந்தி எல்லாம் எழுந்து போய் போடணும். இப்பதான் ரிமோட் வந்தாச்சே... அது இந்த பசங்க கைல பாடா படுது.

நம்ம பிராயத்துல எவ்வளவு விளையாட்டுகள் நொண்டி, கிட்டிப்புள், பச்சக்குதிரை, கபடி, பம்பரம், திருடன் போலீஸ்னு எவ்வளவு விளையாட்டுகள். இன்னிக்கு ஜெனரேஷனுக்கு இதுல ஒண்ணாவது தெரியுமா? செல்போனை கைல கொடுத்தா அதுல வீடியோ கேம் விளையாட தெரியும்.

நீ வேணும்னா பாரு... இன்னும் 30 வருஷம் கழிச்சு கண்ணாடி போடாம ஒரு நபர்கூட இருக்க மாட்டாங்க. அதேபோல அறுபது வயசுல சாகறவங்க எண்ணிக்கையும் அதிகமாயிடும். இந்த அக்ரஹாரம் எனக்குள்ள இந்த எண்ணங்களை தான் உறுதிப்படுத்துது'' என்றான் வின்சென்ட்.

''வாஸ்தவம்தாண்டா... வயித்தெரிச்சலாதான் இருக்கு.''

''இந்த தெருவுல உன் வீடு எங்க இருக்கு?''

''கடைசில இருக்கு - இன்னும் போ...'' - கார் விரைந்தது. இறுதியில் சென்று பெரிய சிமிண்ட் திண்ணையும், பெரிய மர தூண்களும் கொண்ட வீட்டின் முன்னால் நின்றது.

வீட்டிற்கு மதில் சுவர் இருந்து அதில் மாடமும் இருந்தது. ஆனால் மதில் சுவரில் காட்டுக் கொடிகள் வளர்ந்து சுவர் தெரியாதபடி மூடியிருந்தன. மெயின்கேட் கூட துருவேறி ஒரு உதைக்கு தாங்காதபடிதான் இருந்தது.

வாசலிலேயே நின்று ஒரு பார்வை பார்த்தான் கேசவன். எப்படி இருந்த நான் - இப்படி ஆயிட்டேன்' என்னும் விவேக் காமெடியில் நகைச்சுவை இருந்தால் இங்கே துயரச் சுவைதான் இருந்தது. வின்சென்டும் கவனித்தான். அதற்குள் அக்கம் பக்கம் உள்ள சிலரும் வந்து சேர்ந்தனர்.

''அடடே... அய்யர் மகனா?''

''ஆமாம் கந்தசாமி - நல்லா இருக்கியா?''

''ஏதோ இருக்கேன் தம்பி - என்ன ஊட்ட பாக்க வந்தீங்களா?''

''ஆமாம்...''

''இதை எப்ப கருப்பச்சாமிக்குன்னு உங்க தாத்தா கொடுத்துட்டாரோ அப்பவே இந்த வீடும் கருப்பு வீடாகி உள்ளயும் இருட்டு அடைஞ்சு போச்சு...''

அந்த கந்தசாமி கருப்பச்சாமியை ஞாபகப்படுத்தியது வின்சென்ட்டை கீறியது.

''ஐயா... இந்த வீடு இவங்க வீடுதான். கருப்பச்சாமி வீடெல்லாம் இல்லை. இதை சுத்தப்படுத்தி இங்க பழையபடி குடி இருக்கத்தான் வந்துருக்கோம். இதை நல்லா தெரிஞ்சுக்குங்க...'' - என்றான்.

'அப்படியா... ஆமா நீங்க யாரு?''

''நான் கேசவனோட நண்பன்...''

''பட்டணத்து ஆளா?''

''ஆமா... அதுக்கு ஏதாவது சொல்லப் போறீங்களா?''

''என்னத்த சொல்றது... உங்களுக்குத்தான் சாமி, பூதம்னு ஒரு எழவும் கிடையாதே...''

''கரெக்ட்... அதெல்லாம் வேலை வெட்டி இல்லாம திண்ணைல உக்காந்து தேய்க்கறவங்களுக்கு... எங்களுக்கு இல்லை. நீங்க கிளம்புங்க.''

- வின்சென்ட் ஒரே போடாக போட்டான். அதை கேசவனும் தடுக்காமல் வீட்டுக்குள் நுழையத் தயாரானான். இரும்புக் கதவை தள்ளினான். கிரீச்சிட்டது.

''தம்பி...'' - அந்த கந்தசாமி தடுப்பதுபோல் அழைத்தார்.

''என்ன கந்தசாமி...''

''இந்த தம்பி பேசுனதெல்லாம் நெஜமா?''

''ஆமாம்... தப்பா இருந்தாதான் நான் நடுவுல பூந்து தடுத்திருப்பேனே...?''

''அப்ப இவ்வளவு நாளா கருப்பு வீடுன்னு போட்டு வெச்சிருந்தது எல்லாம்....?''

''நாங்க போட்டு வைக்கல. கருப்பு வீடுன்னு நாங்களும் பேர் வைக்கல. அது ஊருக்குள்ள உங்களைப் போல சிலர் பண்ண வேலை. சுருக்கமா சொல்லிக்கிறேன். இது எங்க சொந்த வீடு. நாலு கிரவுண்டு நிலத்துல பின் பக்கம் மாமரம், புளிய மரம்னு இருக்கற எங்களோட சொத்து இது. இதை நாங்க விக்கப் போறோம். ஏன்னா எனக்கு பணம் வேணும். பணம் வந்தாதான் என் தங்கை சிந்துஜா கல்யாணமும் பண்ண முடியும்.

எங்க கஷ்டம் கருப்பச்சாமிக்கும் தெரியும்.

ஆகையால அவர் எங்களுக்கு உதவிதான் செய்வார். நிச்சயம் உபத்திரவம் பண்ணமாட்டார். நீங்க போய் உங்க வேலையை பாருங்க...'' - கேசவனும் நன்றாகவே பேசினான். அந்த கந்தசாமி முகம் இருளடைந்து போனது.

தேங்கி நின்றார்.

''போங்கண்ணே... போய் வேலைய பாருங்க...''

''இல்ல தம்பி... ராத்திரில இங்க உள்ள இருந்து குதிரை கனைக்கிற சப்தம் கேக்குது. சாமி இங்க இருந்துதான் நடமாடிக்கிட்டிருக்கு. இதை நான் சொல்லலை.

ளால கேட்டுப்பார். எல்லாரும் சொல்வாங்க. பூசாரியை
தவிர யார் உள்ள நுழைஞ்சாலும் காய்ச்சல் வந்து படுத்
படுக்கை ஆயிட்றாங்க. இதெல்லாம் தெரியாம நீங்
வந்து இது எங்க வீடு - விக்கப் போறோம்னு சொல்றீங்
சரி... இனி கருப்பசாமி பாடு - உங்க பாடு...'' - என்று
ராக திரும்பிச் செல்லத் தொடங்கினார்.

அவரின் அமர்த்தலான அந்த பேச்சு கேசவனை
சற்று அதிரவிட்டது. அதற்கு ஏற்ப குதிரை கனைக்கு
சப்தமும் கேட்டது. ஒரு வினாடி உடம்பின் அவ்வள
ரோமக் கால்களும் அப்படியே விரைத்துக் கொண்டன
அதேபோல குளம்படிச் சப்தமும் கேட்டது.

''வின்சென்ட்....''

''என்ன பயந்துட்டியா... உள்ள இருந்து யாரோ
குதிரைல பின்பக்கமா போயிருக்காங்க. வா யார்னு போ
பார்ப்போம்...'' - வின்சென்ட் வேகம் எடுத்தான். வீட்டி
பக்கவாட்டில் இடம் இருந்தது. அதில் ஏராளமான காட்டு
செடிகள் முளைவிட்டிருந்தன. அவைகளுக்கு நடுவி
புகுந்து துணிச்சலாக ஓடினான். ஒரு இடத்தில் பாம்
புற்று தோள் அளவு உயரத்துக்கு வளர்ந்து ஏராளமா
துவாரங்களோடு அவனை மிரட்டியது.

பின்பக்கத்தில் யாரும் இருந்ததற்கான தடயமே
இல்லை. குதிரை என்று ஒன்று இருந்திருந்தால் அ
கட்டப்பட ஒரு இடம், நிற்க இடம் அதன் சாணம் என்
ஏராளமான தடயங்கள் இருக்கும்.

அப்படி எதுவும் இல்லை!

கேசவனும் பின்தொடர்ந்து வந்து நின்றான்.

''கேசவா... இங்க மனுஷங்க வந்துட்டு போ
தடயமே இல்லை..''

''அப்ப சத்தம் கேட்டுச்சே...?''

''பக்கத்து வீட்ல டீ.வி. இருக்கான்னு பார்...''

''டி.வி.ல வந்த காட்சியா இருக்கும்னு நினைக்க
றியா?''

''வேற எப்படி நினைக்கறது - நீயே பார்...''

''பக்கத்து வீடும் பூட்டிதான் இருக்கு. அங்க யாரும்
இல்லை.''

''அப்ப சம்திங் ராங்...''

''என்ன சொல்றே... ஒருவேளை நிஜமாலுமே கந்தசாமி
சொன்ன மாதிரி...''

''என்கூட இருந்துகிட்டு இப்படி பேசாதே. அதான்
கருப்பசாமிகிட்டயே சொல்லிட்டேன். அவர் எங்களுக்கு
உதவிதான் செய்தார். உபத்ரவம் பண்ண மாட்டார்ன்னு
சொல்லிட்டு இப்ப ஏன் பயப்பட்றே....?''

''இல்ல... வந்து...''

''போதும்... இப்ப நாம இந்த வீட்டை டோட்டலா
சுத்தப்படுத்தறோம். மேஸ்திரி கொத்தனாரோட வந்து
இடிபாடுகளையும் சரி செய்யறோம்.''

''வின்சென்ட்...''

''என்ன வின்சென்ட்... என்ன தயக்கம்?''

''எனக்காக நீ ரிஸ்க் எடுக்காதே?''

''மண்ணாங்கட்டி. உன் பயத்தை எனக்குள்ள வேறு
விதமா புகுத்தப் பாக்காதே... ஆமா வீட்டோட சாவி
இருக்கா... உள்ள போய் பாக்கலாமா?''

''பூட்டு சாவியே கிடையாது - திறந்துதான் இருக்கு...''

''அப்ப வா உள்ளயும் போய் பார்ப்போம்... அடேங்
கப்பா. எவ்வளவு பெரிய வீடு. இப்படி ஒரு வீடு நம்ப
மதுரைல மட்டும் இருந்தா நாமதாண்டா மதுரைல
கோடீஸ்வரன். இன்னிக்கெல்லாம் அபார்ட்மென்ட்ல

ஒரு மாடிப்படியை, ஒரு வாசலை, நாலு குடும்பம் பயன்படுத்தி வாழறோம். எப்பப் பார் கதவையும் பூட்டியே வெச்சுருக்கோம். அந்த வாழ்க்கையையே பெருசா மெச்சிக்கவும் செய்யறோம். இங்க பார்...'' - வின்சென்ட் வியந்தபடியே பின் வழியாகவே வீட்டினுள் நுழையத் தொடங்கினான்.

6

அந்த ஆய்வுகளுக்கு பிறகு மனதின் எண்ண அலைகள் மின்காந்த அலைகள் போல, ஒருவித அலைகளாக மாறுவதாகவும் அவை ஆல்பா, பீட்டா, காமா, டெட்டா என்று பெயர்கள் கொள்வதையும் கண்டறிந்தனர். இதில் ஆல்பா நிலை என்பது ஆழ்மன நிலையில் நாம் சிந்திப்பதாகும். புற உலகின் எல்லா சந்தடிகளையும் காதில் வாங்கினாலும் கருத்தில் கொள்ளாமல், வழக்கமான எண்ண ஓட்டத்திற்கு நடுவே ஆழ்மனதுக்குள் சென்று அங்கே நாம் நமக்கு மிக பிரியமான ஒருவரின் நலன் கருதியோ இல்லை அவரிடம் சில மாற்றங்களை விரும்பியோ நாம் தியானத்தில் ஈடுபடும்போது சம்பந்தப்பட்டவரின் ஆழ்மனதில் நம் எண்ணங்களின் தாக்கம் ஏற்பட்டு அவரிடம் நாம் விரும்பும் மாற்றம் ஏற்படுகிறது.

உதாரணமாக ஒரு தாயானவர் தன் மகள் சிறந்த பாடகியாக வர வேண்டும் என்று விரும்பினார். காரணம் அவரது மகளின் குரல் அவ்வளவு இனிமையாக இருக்கும். ஆனால் அந்த பெண்ணுக்கே பாட்டு கற்றுக் கொண்டு பாடகியாவதில் கொஞ்சமும்

விருப்பம் இல்லை. எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் கேட்கவும் தயாராக இல்லை. இந்த நிலையில் தன் ஆழ்மனதில் மகளை நினைத்து தீவிரமாக தன் விருப்பத்தை வலியுறுத்தி தியானம் செய்தார். சில நாட்களிலேயே அவரது மகளிடம் மாற்றம். அம்மா எனக்கும் இப்பொழுது பாட்டு கற்றுக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது. நான் போகிறேன் என்று பாட்டு கற்றுக் கொள்ள புறப்பட்டாள். இதுதான் ஆழ் மனதின் சக்தி. இதை புரிந்த பயன்படுத்துவதில்தான் சாதுர்யம் உள்ளது!

கொல்லை வழியாக வின்சென்ட்டும் கேசவனும் உள்ளே நுழைந்தனர். முதலில் சமையல் கட்டுதான் தட்டுப்பட்டது. அந்த நாளில் விறகு அடுப்புதான். அடுப்பை ஒட்டிய சுவற்றில் கரியானது பரவியிருந்தது. அடுப்புக்கு பக்கத்திலேயே ஆட்டுக்கல். அந்தக் கல்லின் குழியில் மழை நீர் தேங்கியிருக்க அதனுள் ஒரு தவளையும் படுத்திருந்தது.

இப்பக்கத்தில் ராட்டினக் கிணறு.

ராட்டினத்தைக் காணவில்லை.

கிணற்று சுவற்றில் காளான்கள் முளைத்திருந்தன. வின்சென்ட் கிணற்றருகே சென்று எட்டிப் பார்த்தான். கிணற்றில் தண்ணீர் இருந்தது. அதில் எட்டிப் பார்த்த அவன் முகம் தெரிந்தது.

''வின்சென்ட்... இந்த கிணத்துல தண்ணி போகவே போகாது. தண்ணியும் இளநீர் மாதிரி இருக்கும்'' என்றான் கேசவன்.

''போடா... எவ்வளவு வசதியான வீடு. இப்படியாடா பொறுப்பில்லாம போட்டு வைப்பீங்க?'' - வின்சென்ட்

சடைத்தான். அதை ஆமோதிப்பது போல கிணற்றை ஒட்டிக் கிடந்த துணி துவைக்கும் கல் மேல் ஓணான் ஒன்று முன்னிரண்டு கால்களை மட்டும் தூக்கி தன் கொள்ளுப் பருப்பு விழிகளால் ஒரு பார்வை பார்த்தது.

அப்படியே சமையற்கட்டை கடந்து தாழ்வாரம், உக்ராண அறை, பூஜை அறை, தானியக் கிடங்கு அறை, கூடம், வாசல் வராண்டா மையத்தில் உள்ள திறந்திருக்கும் பிரம்மபாகம் அதில் உள்ள தண்ணீர் முற்றம் என்று சகலத்தையும் பார்த்தான். தண்ணீர் முற்றத்தை பார்த்த போது அங்கே கடப்பைக் கற்கள் போடப்பட்டிருந்தது. சுலபமாக அதை அகற்றலாம். அது ஆச்சரியம் தந்தது. ஆனால் கேசவன் அந்த கடப்பை கற்களை ஆச்சரியமாக பார்த்தான்.

''நீ என்னடா உன் வீட்டையே புதுசா பாக்கற மாதிரி பாக்கறே?''

''இங்க இப்படி கடப்பை கல் இருந்ததா எனக்கு நினைவில்லை... அதான்...''

''அப்படின்னா...?''

''இங்க சிமெண்ட் போட்டு பூசின தளம்தான் இருந்தது.''

''அப்ப இந்த கடப்பை கற்கள்?''

''அதான் எனக்கும் தெரியல...''

''எப்படி தெரியும்... இப்படியே போட்டு வெச்சா எது வேணா மாறும் எப்படி வேணும்னா மாறும்.''

''நீ என்னடா சொல்றே?''

''இங்க யாரோ வந்துட்டு போறாங்கன்னு நினைக்கறேன்.''

''எப்படி அவ்வளவு உறுதியா சொல்றே?''

''இல்லன்னா இந்த பாகம் மட்டும் சுத்தமா எப்படி இருக்க முடியும்?''

''நீ அப்படி வர்றியா?''

''போகட்டும்... யாரும் இல்லாத வீடுன்னாலே இப்படித்தான். பரவாயில்ல. கதவு-ஜன்னல் எல்லாம் திருடப்படாம அப்படியே இருக்கு... அதுக்காக சந்தோஷப் பட்டுக்கோ...''

''திருட்டா... போடாபோ..! கருப்பு சொத்து இது... யாருக்கு தைரியம் வரும்.''

''திரும்ப கருப்பு சொத்துன்னு உன் பயத்தை காட்டாதே. இது உன் தாத்தா சொத்து. சட்டப்படி பேரனான உனக்கு இப்ப இது சொந்தம். இதை ரைட் ராயலா விக்கற உரிமை உனக்கு இருக்கு. நீ விக்கப் போறே. ராவுத்தரும் வாங்கப்போறார். அவ்வளவுதான் மேட்டர். எக்காரணத்தை கொண்டும் நீ இனி கருப்பை நினைக்கக் கூடாது... ஓகே?''

''சரி வின்செண்ட்... இவ்வளவு பெரிய வீட்டை நம்ம இரண்டு பேரால மட்டும் சுத்தப்படுத்த முடியாது. வெளிய போய் யாரையாவது கூட்டிகிட்டு வருவோமா?''

''தாராளமா. இப்ப நாம செய்ய வேண்டியதும் அதைத்தான்...'' - வின்செண்ட்டும் கேசவனும் முன் வாசல் வழியாக கதவை திறந்து கொண்டு வெளியேற முற்பட்ட போது எங்கிருந்தோ ஒரு நல்ல பாம்பு இருந்து மாலை போல் வந்து கேசவன் கழுத்தில் விழுந்தது.

கேசவன் ஒரு விநாடி வெலவெலத்துப் போய்விட்டான்.

அது ஆறடி நீளப் பாம்பு...

சிவபெருமான் கழுத்தில் இருப்பதுபோல அவன் கழுத்தில் கிடக்க கேசவன் உறைந்து போய் 'வின்செண்ட்'

என்று கத்தக்கூட நாதியற்றுப் போய் மயங்கத் தொட
கினான்.

கீழே விழ ஆரம்பித்த அவன் மேல் இருந்து கீ
விழுந்த அந்த பாம்பும் அவன் மேல் விழவும் தாளம
ஒரே போடாக போட்டது.

அப்படி அது போட்ட இடம் அவனது முட்டிக்காலுக்
சற்று கீழே உள்ள கண்டங்கால் பகுதியாக இருந்தது.

வின்செண்ட்டும் விதிர்த்தான்!

★ ★ ★

நாட்டு வைத்தியர் காதிலும் மூக்கிலும் ஏதே
மூலிகைச் சாற்றை விட்டபடியே கேசவனின் தொடை
இறுகக் கட்டியிருந்தார். கடிபட்ட இடத்தை கத்திய
கீறி ரத்தத்தையும் எடுத்து துப்பியிருந்தார்.

துப்பிய ரத்தத்தில் ஒருவகை கருநீல புள்ளிக
தெரிந்தன. அருகில் இருந்து கவனித்தபடி இருந்
வின்செண்ட்டுக்கு வைத்தியர் என்ன சொல்லப் போ
றாரோ என்ற பதட்டம் இருந்தது. என்னதான் முற்போ
காக யோசித்தாலும், பேசினாலும் சில பிரச்சனைகள
நேருக்கு நேராக சந்திக்க நேரும்போது மனஉறு
குலையத்தானே செய்கிறது?

அதிலும் இது உயிர்ப் போராட்டம்!

வைத்தியர் பார்த்த வைத்தியம் கேசவனிடம் ஓரள
எடுபட்டிருந்தது. அவனிடம் தலையில் அசைவும் உத
டில் முனகலும் வெளிப்பட்டது. அது வின்செண்ட்டுக்கு
கொஞ்சம் தெம்பைத் தந்தது.

வைத்தியரும் அவனைப் பார்த்து பேசத் தொட
கினார்.

''நல்லவேளை நான் ஊர்ல இருந்தேன். இவரு நே
துக்கு பாம்புகடி மூலிகையும் கண்ணுல பட்டுச்சு. இல்

இன்னேரம் வானம் பார்க்கப் போயிருக்க வேண்டியது தான்'' என்றபோது முக்குரோட்டில் வின்செண்ட்டோடு இளநீர் குடித்த மோட்டார் பைக் மனிதர் செய்தி கேட்டு வந்திருந்தார்.

வந்தவர் வின்செண்ட்டிடம் ''கருப்பு விசயத்துல நீங்க எகத்தாளமா பேசும்போதே நினைச்சேன்'' என்றார்.

''மிஸ்டர் மோட்டார் பைக்... உடனே இதை கருப்பச் சாமியோட முடிச்சுப் போடாதீங்க. பாழடைஞ்ச வீட்டுக் குள்ள பாம்பு இருக்கிறது ரொம்ப சகஜம். நாங்கதான் கொஞ்சம் அலட்சியமா இருந்துட்டோம். அதான் கடிச் சிடிச்சு...''

''இப்பகூட மீசைல மண் ஒட்டலேங்கற மாதிரியே பேசறீங்களே தம்பி...''

''அப்படி உங்களுக்கு தெரிஞ்சா அப்படியே வெச்சுக் குங்க.''

''வேண்டாம் தம்பி... கருப்பு எச்சரிக்கை பண்ணி யிருக்கு. மீறுனா உசுர் போறது நிச்சயம்...''

''யார் உயிர்?''

''சரி... இனி பட்டா மட்டுமே உங்களுக்குப் புத்தி வரும்.''

- அவர் விலகிக் கொண்டார். ஆனால் வைத்தியர் வின்செண்ட்டிடம் எதுவுமே கேட்கவில்லை. உள்ளூர்கார ராக இருந்து கொண்டு அவர் எதுவும் பேசாதது ஆச்சரியத் தையும் அளித்தது.

''வைத்தியரே நீங்க எதையும் சொல்லவே இல் லையே...?''

''என்ன தம்பி நான் சொல்லணும்னு எதிர்பார்க்க றீங்க?''

''இல்ல... உங்களுக்கு இந்த கருப்பச்சாமி மேல பக்தி கிடையாதா? பைக்காரர் சொன்னது சரியா?''

''நம்புனாதான் அது சாமி... அவ்வளவு ஏன் நம்பிக்கைன்னு ஒண்ணு இருக்குதே அதுவே என் வரைல சாமி தான்...''

''இது நல்லா இருக்கே... இதை நானும் ஏத்துக்கறேன். நம்பிக்கையோட இருக்கணும். நம்பிக்கை இழக்கக்கூடாது. நம்பிக்கைதான் மனுஷனோட பலம். அதை கடவுளிடம் சொல்லத் தேவையில்லை. சொன்னா தப்பும் இல்லை...''

''அதேசமயம் வாக்கு சுத்தமும் முக்கியம்...''

''ஒத்துக்கறேன்... மனுஷனுக்கு சொல் ரொம்ப முக்கியம். மாறி மாறி பேசக்கூடாது...''

''அப்ப எதுக்கு தம்பி அந்த கருப்பு வீட்டுக்குள்ள மட்டும் போனீங்க?'' - வைத்தியர் சடாரென்று அப்படி ஒரு கேள்வியை கேட்பார் என்று வின்சென்ட் எதிர் பார்க்கவேயில்லை.

''வைத்தியரே நீங்க என்ன நம்பிக்கையை பத்தி பேசிட்டு அப்படியே வீட்டுக்கு தாவிட்டீங்க?''

''நான் தாவல தம்பி - உங்க கருத்துதான் என்னை தாவச் சொன்னது...?''

''என் கருத்தா?''

''ஆமாம்... சொல் பிசகக்கூடாது. மாறி மாறி பேசக் கூடாதுன்னு சொன்னீங்கல்ல...?''

''ஆமாம்... அதுதான் என் கொள்கையும் கூட...''

''அது இதோ இந்த அய்யர் மவனுக்கு இல்லையா?''

''ஓ... நீங்க அப்படி வர்றீங்களா...?''

''நேராவே வரேனே... கருப்பச்சாமிக்குன்னு சொல்லி

நேர்ந்துகிட்டு வீட்டை ஒப்படைச்சிட்டும் போயிட்ட நிலைல திரும்ப வந்து அந்த வீட்டை எடுத்துக்க நினைக்கறது சரியா?''

''வைத்தியரே... உங்கள நான் என்னவோன்னு நினைச்சுட்டேன். பைக் காரர் தேவலை உங்களுக்கு. அவர் தன் பயத்தைத் தான் காட்டினார். ஆனா நீங்க பயமுறுத்தாம ஆனா அழுத்தமா தாக்கறீங்க.

உங்க கேள்விக்கு வரேன்.

கேசவன் தாத்தா உணர்ச்சிவயப்பட்டு சாமிகிட்ட வேண்டிகிட்டிருக்கலாம். ஆனா அது ஒரு மாயை... இங்கிலீஷ்ல இல்லூஷன்னு சொல்வோம். இல்லாத ஒரு கருப்பச்சாமிய இருக்கறதா நம்பி உணர்ச்சிவசப்பட்டு பேசின பேச்சு சத்தியமா பேசின பேச்சு ஆகாது. இல்லை. இதை நான் ஒத்துக்கமாட்டேன்னு நீங்க சொன்னா நான் இப்ப கேக்கற கேள்விக்கு பதில் சொல்லுங்க. அவ்வளவு பக்தியோட கொடுத்த வீட்டை அந்த கருப்பச்சாமி ஏன் வந்து வாங்கிக்கல?''

''என்னது... வாங்கிக்கலையா - இது என்ன தம்பி பேச்சு?''

''அவர் இருந்தா வாங்கிகிட்டிருக்கணும். அந்த வீட்டையும் சுத்தமா வெச்சிருக்கணுமில்ல... இப்படியா பாம்பும் தேளும் அங்க நடமாடிக்கிட்டிருக்கும்?''

''அது நடமாட்ற இடம் அப்படித்தான் தம்பி இருக்கும். பாம்பு அதுக்கு மாலை மாதிரி... தேள் அதுக்கு எறும்பு மாதிரி...''

''உங்களால என் கேள்விக்கு சரியான பதிலை தர முடியல. அதான் உளற ஆரம்பிச்சிட்டீங்க... போய்ட்டு போகுது. என் நண்பன் உயிரை காப்பாத்திட்டீங்க. உங்களுக்கு நன்றி. உங்க ஃபீஸ் எவ்வளவு?''

''யாரா இருந்தாலும் எந்த வியாதியா இருந்தாலும் இப்ப அம்பத்தி ஒண்ணு வாங்கறேன். முந்தி பதினெட்டு ரூவா தான் வாங்கிக்கிட்டிருந்தேன். இப்பதான் விலைவாசியெல்லாம் ஏறிப் போயிடிச்சே. கட்டுப்படியாகணுமில்ல?''

''பரவால்ல... ஏதோ ஃபீஸ் வாங்கறதுலயாவது இந்த காலத்து மனுஷரா இருக்கறீங்களே... ரொம்ப சந்தோஷம்,'' - என்றான். அவர்கள் பேச்சைக் கேட்டபடியே கேசவனும் எழுந்து உட்கார்ந்திருந்தான்.

''தம்பி... மதுரை பக்கம் போகைல பெரிய ஆஸ்பத்திரிக்கு போய் எதுக்கும் ஒரு பாம்புக்கடி ஊசி போட்டுக்குங்க... நாளைக்கே எழுந்திரிச்சி ஓடலாம்...'' - என்றவரை பார்த்து சிரித்தபடியே கேசவனை எழுப்பி கைத்தாங்கலாய் நடந்து சென்று காரில் ஏறினான் வின்சென்ட். முகத்தில் பலத்த சோர்வு. பின்பக்கமாய் சாய்ந்து பெருமூச்செல்லாம் விட்டான்.

''ஒண்ணுமில்லை கேசவா... வைத்யர் சொன்ன மாதிரி ஜி.எச்.சுக்கு போய் ஒரு ஊசி போட்டுப்போம். என்ன?''

''உம்...''

''சரி புறப்படுவோமா?''

''உம்...''

''திரும்ப நாளைக்கோ இல்ல மறுநாளோ வந்து வீட்டை மொத்தமா க்ளீன் பண்ணுவோம். அப்ப அந்த பாம்புக்கு இருக்கு.'' - பேச்சோடு பேச்சாக காரில் ஏறினான். அங்கங்கே நின்றபடி ஊர் ஜனங்கள் வெறித்தபடியே இருந்தனர்.

''நல்லவேளை... பெருசா யாரும் வந்து கருப்பு புராணம் படிக்கல. வைத்தியர் மட்டும் கொஞ்சம்

புத்திசாலித்தனமா ஆரம்பிச்சார். ஆனா முட்டாள்தனமா முடிச்சிட்டார்'' - என்றபடியே காரைக் கிளப்பினான்.

காரும் ஓட ஆரம்பித்தது!

கேசவன் மௌனமாகவே வந்தான்.

''என்னடா ரொம்ப டயர்டா இருக்கா?''

''ஆமாம் வின்சென்ட். நான் செத்துடுவேன்னே நினைச்சிட்டேன். இப்ப உயிரோட இருக்கறத நினைச்சா கனவு போல இருக்கு.''

''வைத்தியர் கொஞ்சம் விஷயம் தெரிஞ்சவர். அதான் காப்பாத்திட்டார். நானும் கொஞ்சம் பயந்துதான் போனேன். ஆனா வாழ்க்கைல இந்த மாதிரி விபத்துக்கள் ஏற்படத்தான் செய்யும். அதை புத்திபூர்வமா தாண்டிப் போயிடணும். நீயும் இப்ப தாண்டிட்டே...''

''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல வின்சென்ட். ஆனா ஒரு விஷயம்.''

''என்னடா?''

''இனி நான் வீடு விஷயத்துல ரிஸ்க் எடுக்கறதா இல்லை..'' - கேசவன் சொல்லிய நொடி காரிடம் கிரீச்சிடல்! தேங்கி நின்றது.

''என்னடா நீ இன்னும் திருவாயை திறக்கலியேன்னு பார்த்தேன்.''

''இல்ல வின்சென்ட்... எனக்கு இப்படி நடந்தது அப்பா அம்மாக்கு இந்த நிமிஷம் தெரிஞ்சிருக்கும். அவங்க இனி என்னை இந்த ஊரை பத்தியே நினைக்கக் கூடாதுன்னு தான் சொல்வாங்க பார்...''

''அது எப்படிடா நீயும் நானும் சொல்லாம உன் அப்பா அம்மாவுக்கு உனக்கு பாம்பு கடிச்ச விஷயம் தெரிய முடியும்?''

‘‘தெருவே பார்க்கதானே என்னை வைத்யர்கி தூக்கிட்டு வந்தே? தெருவுல மணியகார்னு ஒருத்த இருக்கார்... அவர் போன் பண்ணி சொல்லியிருப்பார்... கேசவன் யூகித்தது சரி என்பதுபோல அவன் செல் னுக்கு அழைப்பு.

‘‘அப்பாதான்னு நினைக்கறேன்... வைத்யர் வீட் கிட்ட டவர் இல்லை. அதான் அங்க செல் ஒர்க் ணல. இந்த பக்கம் வரவும் வேலை செய்யவும் அ களும் பிடிச்சிட்டாங்க பார்...’’ - என்றபடியே பாக் டில் இருந்து போனை எடுத்தான்.

அவன் அப்பாவேதான் - அவர் பெயர் மின்னியது

ஆனால் பேசியது யாரோ?

‘‘ஹலோ யார் பேசறாங்க?’’

‘‘யாரா... நான் கேசவன். நீங்க யார்?’’

‘‘நான் யாருன்னு சொன்னா உங்களுக்கு தெரி போறதில்ல தம்பி. இங்க ரெண்டு பேர் கார் ஆக்சிடெண் ஆகி மயங்கிக் கிடக்கறாங்க. இந்த செல்போன் பக் தால கிடந்துச்சு. எடுத்து பார்த்து கடைசியா அவங்க பேசி நம்பரை கூப்பிட்டு பேசிக்கிட்டு இருக்கேன். நீ இவங்களுக்கு உறவா?

‘‘நான் அவங்க மகன்! ஆமா, ஆக்சிடெண்ட் எ நடந்துருக்குது?’’

‘‘இங்கதான் சிவகாசி ரோட்ல கருப்பூர் மண் ரோ மேல...’’

‘‘மை காட்... இவ்வளவு தூரம் வந்துட்டாங்களா...

‘‘நீங்க எங்க இருந்தாலும் வேகமா வாங்க. தைரிய வாங்க, உயிருக்கு ஆபத்து எதுவுமில்ல?’’

‘‘சரிங்க நாங்க பக்கத்துலதான் இருக்கோம். ஒ

பத்து நிமிஷத்துல வந்துடுவோம்.’’ - என்று போனை கட் செய்த கேசவன் கதறி அழவே தொடங்கிவிட்டான்!

7

‘வாழ்வில் பெரிய வெற்றிகள் பெற்றவர்கள் பலரிடம் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அவர்கள் அவ்வளவு பேருமே வெற்றிக்குரிய விஷயத்தில் இளவயது முதலே கனவு கண்டவர்களாக இருந்தது தான் ஆச்சர்யம். இதில் பல ஆச்சர்யங்களும் அறிய வந்தன. வெற்றி பெற்றவர்களுடைய வெற்றிக்கு பின்னால் அவர்களின் தாய் தந்தையர்களின் கனவும் ஒளிந்திருந்தது.

குறிப்பாக சினிமா துறையில் பெரிதும் வெற்றி பெற்றவர்கள் மனதுக்குள் அவர்கள் நெடுங்கால மாக சினிமாவில் வெற்றி பெற வேண்டும் என்று தவித்த தவிப்பும் துடிப்பும் நிறையவே இருந்தது.

இதேபோல கிரிக்கெட்டில் வெற்றி பெற்ற ஒரு வீரரும் நான் எப்போதும் எதையாவது எடுத்து தட்டியபடி இருப்பேன். அதேபோல ரோட்டில் கிடக் கும் கற்களை பொறுக்கி எடுத்துக் கொண்டு எங்காவது குறிபார்த்து அடித்தபடியே இருப்பேன்’’ என்றார்.

பின்னாளில் இந்த அடித்ததும் குறி பார்த்த துமே கிரிக்கெட்டில் பெரிய வீரனாக்கியது!

மனதுக்குள் மூளும் இப்படிப்பட்ட விருப்பங்கள் எப்படி வெற்றியாக மாறுகின்றன? அதையும் அறிஞர்கள் கண்டறிந்தனர்... அது ஒரு ஆச்சரிய மான விடையாகும்!

கதறி அழுத கேசவன் வின்சென்ட்டை கவனிக்க வைத்தான்.

“கேசவா யார்டா போன்ல... எதனால அழறே?”

“வின்சென்ட் அடிமேல அடிடா... என்னை பாம்பு கடிச்ச விஷயம் தெரிஞ்சு அப்பாவும் அம்மாவும் பதறிப் போய் ஒரு கார்ல இங்க என்னை பார்க்க வந்துருக்காங்க. வர்ற வழியில கார் ஆக்சிடெண்ட் ஆகி ரோட்டுல கிடக்கறாங்களாம்டா...!”

“நிஜமாவா... அதுக்குள்ள இவ்வளவு தூரம் வந்துட்டாங்களா? ஆமாம் ஆக்சிடெண்ட் எங்க ஆகியிருக்கு?”

“நீ வேகமா போ... நாம வந்த வழியிலேதான்...” - கேசவன் கண்ணீரை துடைத்தபடி கூற காரும் அசுர வேகம் எடுத்தது.

புழுதி பறந்தது... சாலையோரமாய் வாத்துகள் குட்டையை நோக்கி நடந்து கொண்டிருந்தன. அவைகள் எல்லாம் காரின் வேகம் கண்டு சிலிர்ப்பிக் கொண்டு வானில் ஏறிப் பறந்ததில் ஒரே களேபரம்.

வாத்து மேய்ப்பவன் அப்படியே பக்கவாட்டில் ஆவாரம் செடிப் புதரில் போய் விழுந்தவனாக கத்த ஆரம்பித்தான். வின்சென்ட்டும் முதல் தடவையாக ஒருவேளை நிஜமாலுமே கருப்பு இருக்கிறதோ என எண்ணத் தொடங்கியிருந்தான்!

★ ★ ★

சாலை முக்கு!

கார் ஒன்று புளிய மரத்தில் முட்டியதில் பானட் திறந்து கொண்டுவிட இரு பக்க கதவுகளும் விரிந்து கொண்ட பறவைச் சிறகுகள் போல திறந்தபடி இருந்தன.

“அதோ ஆக்சிடெண்ட் கார்...!” - வின்சென்ட் எதிரில் பார்த்தபடி சற்று பலத்த குரலில் கூற கேசவனும்

கவனித்தான். பாய்ச்சலாக வந்த காரும் ஆக்சிடெண்ட் காரை ஒட்டி நின்றது. கச்சிதமாக ஆம்புலன்சும் தனக்கான அலாரம் சவுண்டுடன் வந்து சேர்ந்தது. அக்கம் பக்கத்தவர்களும் கூடிவிட்டிருந்தனர். கேசவன் தன் காரில் இருந்து துள்ளி அடித்துக் கொண்டு ஓடினான்.

ராஜாராமனும் அபிராமியும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கிடந்தனர். இருவரில் அபிராமிக்கு மட்டும் தலையில் அடிபட்டு ரத்தம் கசிந்திருந்தது. ராஜாராமனுக்கு காலில் காயம்!

பதறிப் போய் அவர்களை தொடப் போன கேசவனை ஆம்புலன்ஸ் மேல் நர்சுகள் விலக்கிவிட்டு ஸ்ட்ரெச்சரில் அவர்கள் உடம்பை ஏற்றி வேகமெடுத்தனர். கூட வந்திருந்த டாக்டர் ஒருவர் ஆம்புலன்சுக்குள்ளேயே அந்த நேரத்துக்கு செய்ய வேண்டிய முதலுதவியை செய்யத் தொடங்கிவிட்டார்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை!

ஆம்புலன்ஸ் புறப்படத் தொடங்கியது.

‘அம்மா அப்பா’ என்று கதறினான் கேசவன்.

“நீங்க இவங்க மகனா?”

“ஆமாம் டாக்டர்...”

“ஆம்புலன்சை அப்படியே ஃபாலோ பண்ணிகிட்டு வாங்க. உயிருக்கு ஆபத்தா எதுவுமில்லை. ஆனா எலும்பு முறிவுக்கும் சதை நசிவுக்கும் நிறைய வாய்ப்பிருக்கு” - என்றார். டாக்டரின் பேச்சுக்கு இடையில் ஆக்சிடென்ட் ஸ்பாட்டை தங்களின் மொபைல் கேமிராவிலும், டிஜிட்டல் கேமிராவிலும் ஒருவர் பல கோணங்களில் படம் எடுத்துக் கொண்டார்.

அதற்குள் போலீசும் வந்து சேர்ந்தது. நவீனமான காரில் இரு போலீசார் வந்து இறங்கினர். வந்த வேகத்தில் விசாரணை தொடங்கிவிட்டது.

"ஐயா... டமால்னு சத்தம் கேட்டு வந்து பாத்தோம்... ஒரு ஐயாவும் அம்மாவும் தெரிச்சு விழுந்து கிடந்தாங்க... காரை ஓட்டிகிட்டு வந்த டிரைவர் நாங்க பாக்க பா... ஓடியே போய்ட்டான்."

"திருட்டு நாயி... தண்ணி போட்டுட்டு வந்து ஓட்... யிருப்பான். அதான் சிக்குனா தப்பாயிடும்னு ஓடிட்டா... போல.." - என்று ஒரு போலீஸ்காரர் கூற, இன்னொருவ... காரை ஒரு சுற்று சுற்றி வந்தார். டேஷ்போர்டில் பார்... முடிந்ததை பார்த்தார். குறிப்பாக ஒரு கவரில் ஆர்... பேப்பர்கள் இன்ஸ்யூரன்ஸ் ஜெராக்சுகள் கிடைத்த... அதுபோதும் அவர்களுக்கு... டிரைவரில் இருந்து ஓ... வரை தூக்கி உள்ளே போட! கேசவனும் கிளம்பிவிட்... ஆம்புலன்சை பின்தொடரத் தொடங்கினான்.

வின்சென்ட் இம்முறை கேசவனிடம் எதுவு... கேட்கவில்லை. பேசவுமில்லை. ஆனால் அவன் மனது... குள் கருப்பச்சாமி இப்படி ஒரு கோபமான ரௌத்... சாமியா என்கிற கேள்வி மட்டும் பெரிதாக எழும்... யிருந்தது!

★ ★ ★

மிகச் சரியாக இருபது மணி நேர இடைவெளியில்... ராஜாராமனும் அபிராமியும் கண்விழித்தனர். ராஜாராம... னுக்கு தொடை எலும்பு முறிந்துவிட்டிருந்தது. பிளேட்... வைக்க வேண்டும். அபிராமிக்கு தலையில் ஆறு தையல்... கள். கண் திறந்த ராஜாராமன் எதிரில் கண்ணீரோடு... கேசவன். அருகில் அவன் மனைவி வைதேகியும் தங்கை... சிந்துஜாவும்... அவர்கள் முகங்களும் இருண்டு போய்... கிடந்தது.

"கேசவா..."

"அப்பா..."

"உனக்கு எதுவும் ஆயிடலையே..."

"அதான் பாக்கறேளேப்பா... நான் நன்னாதான் இருக்கேன்."

"பாம்பு கடிச்சிட்டதா போன் வந்ததே?"

"ஆமாம்பா... ஆனா நாட்டு வைத்யர் காப்பாத்திட்டார். ஜி.எச். போய் ஊசியும் போட்டுண்டுட்டேன். ஐ ஆம் ஆல்ரைட். ஆனா உங்களுக்கு இப்படி ஆனது தாம்ப்பா என்னை கதிகலங்க வெச்சுடுத்து..."

"என்னை விடு உன் அம்மா எப்படி இருக்கா?"

"நன்னா இருக்காப்பா... நன்னா பேசறா..."

"கடவுளே, காப்பாத்திட்டப்பா, காப்பாத்திட்டே"

"ஆமாம்ப்பா... அந்த கருப்பு நம்மளை லேசா தட்டிட்டு விட்டுடுத்து.. நான் இனி அந்த வீட்டுப் பக்கம் போக மாட்டேன்பா.... பாட்டி சொன்னதுதான் சரி. அது ரொம்ப துடியான தெய்வம்."

"ஆமாம் கேசவா... அதை நாங்க ஆக்சிடெண்ட் ஆன இடத்துலயும் பார்த்தோம்..." - ராஜாராமன் ஸ்லாகிப் போடு சொன்ன சமயமாக பார்த்து வின்சென்ட்டும் வந்து சேர்ந்தான்.

அவன் கையில் ஆப்பிள் ஆரஞ்சு ஹார்லிக்ஸ் என்கிற நோயாளிகளுக்கான பரிவுகள்.

"வின்சென்ட்... வந்துட்டியா... உன்னைத் தான் நான் முதல்ல பாக்கணும்னு ஆசைப்பட்டேன். வா... வா..."

"நான்தான் வந்துட்டேனே... உங்களுக்கு இப்ப எப்படி சார் இருக்கு?"

"கால் எலும்பு முறிஞ்சு போச்சு. கட்டுப்போட்டு பெயின் கில்லர் இன்ஜெக்ஷன் போட்டுக்கறதால உன் கூட எல்லாம் பேச முடியறது."

''எப்படி சார் நடந்தது ஆக்சிடெண்ட்... டிரை
குடிகாரனா?''

''இல்லப்பா... நல்ல டிரைவர். எனக்கு ரொம்
பழக்கமானவர்தான்...''

''பிறகு எப்படி சார்?''

''சொல்றேன்... சொல்றேன்... கேசவனை பாம்
கடிச்சிட்டதா மணியக்காரர் போன் பண்ண உடனே
எங்களுக்கு உயிரே போயிட்ட மாதிரி இருந்தது. உ
னேயே டாக்சிக்கு போன் பண்ணி வரச் சொல்லி கார்
ஏறிட்டோம்.

டிரைவரும் அவசரம் தெரிஞ்சு வேகமாவும் அ
சமயம் பாதுகாப்பாவும் தான் ஓட்டிகிட்டு வந்தான்.
அந்த ஆக்சிடெண்ட் ஆன இடத்துகிட்ட புளிய மரத்
கிட்ட வந்தப்போ எங்கிருந்தோ இருந்து வந்த ஒ
அரிவா கார் முன்னால பானட் மேல விழுந்தது. அவ்வள
தான் டிரைவருக்கு கான்சன்ட்ரேஷன் போயிடிச்
காரும் பக்கவாட்டுல மரத்துல போய் டமால்னு மோ
டுச்சு. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். நான் மய
கிட்டேன்.'' - ராஜாராமன் மூச்சு முட்ட பேசிவிட்டு ப
படப்பு குறையாமல் பார்த்தார்.

வின்சென்ட் முகத்தில் அதை கேட்டு தீவிரமா
சிந்தனை.

''வின்சென்ட்... சந்தேகமேயில்லடா... நம்ப கா
மேலே கோழி ரத்தம் அரிவாள் மாதிரி தெரிச்சிச்சு. இங்
அப்பா அம்மா வந்த கார் முன்னால அசல் அரிவாளே
பறந்து வந்துருக்கு. இது கருப்பு வேலைதான்...''

''அதுல என்ன சந்தேகம்? என் சொத்தை விக்க நீங்
யாருடான்னு அந்த கருப்பு நம்மை எச்சரிச்சிருக்கான்
பணம் இல்லேன்னு அவன் வரைல நாம உரிமை

எடுத்துண்டு வீட்டை விற்க ஆசைப்பட்டது பெரிய தப்பு...'' - ராஜாராமன் அழுத்தமாய் சொன்னார். ஆனால் வின்சென்ட்டுக்குள் குழப்பமாகவே இருந்தது.

''என்ன வின்சென்ட் யோசனை... உன்னால் நம்ப முடியலியா.''

''ஆமாம்ப்பா... வின்சென்ட் ஆரம்பத்துல இருந்தே இதெல்லாம் பொய்... முட்டாள்தனம்னே நினைக்கறான். பேசறான்....''

''வின்சென்ட் இன்னுமா உனக்கு நம்பிக்கை வரலை?''

''ஆமாம் சார். ஒரு தற்செயல் சம்பவத்துக்கு இரண்டு சம்பவம் நடந்துருக்கு. இதை உடனே கருப்பச்சாமியோட முடிச்சி போட்டு சிந்திக்கறது எனக்கு சரியா படலை...''

''எது தற்செயல்? விபத்தா?''

''ஆமாம்... விபத்துன்னாலே தற்செயல்தானே?''

''அப்ப கார் மேல வந்து விழுந்த அரிவாள்?''

''அங்க தான் எனக்கு கொஞ்சம் யோசனையாவும் இருக்கு...''

''இதுல யோசிக்க எதுவுமே இல்லை.. நீ நகரத்துப் பிள்ளை. கிராமத்து நம்பிக்கைகள் உனக்கு வேடிக்கையா முட்டாள்தனமா தான் தெரியும். ஆனா நாங்க அங்கேயே பிறந்து வளர்ந்தவங்க.''

''அப்ப எந்த நம்பிக்கைல சார் விக்கற முடிவுக்கு வந்தீங்க?''

''கருப்பு பெரிய மனசு பண்ணி விட்டுடும்கற நம்பிக்கைலதான்...''

''இப்ப உங்க முடிவு?''

''இனி கருப்பூர் வீடு பற்றி நினைக்கறதா இல்லை. காயம் ஆறின உடனேயே குடும்பத்தோட கருப்பு

கோயிலுக்கு போய் கால்ல விழுந்து மன்னிப்பு
டுக்கறதுதான் எங்களுக்கு இப்ப இருக்கற ஒரே வழி
- ராஜாராமன் கருத்துக்கு வின்சென்டின் முகத்தில்
சிரிப்பு தான் பதிலாக பரவியது.

''நீ சிரிச்சா சிரிச்சிட்டு போ.. என் கருத்துல மா
மில்ல...''

''எப்படி சார் இப்படி யோசிக்காம முடிவுக்
வரீங்க?''

''இது யோசிச்சு எடுத்த முடிவுதான்... இது யோ
காம எடுத்த முடிவுன்னு உனக்கு தோணுவது
எனக்கு ஆச்சரியமா இருக்கு...''

''நிச்சயமா சார்... கடவுள் இருக்காரோ இ
லையோ - இருந்தா நல்லா இருக்கும்னு நினைக்கற
தான் சார் நான். அப்படிப்பட்ட கடவுள் உங்க வரை
பெரிய மனசு பண்ணாம போயிட்டார்னு சொன்னீங்
பாருங்க... அதை நினைச்சுதான் சிரிப்பு வந்துடுச்சி.
- வின்சென்ட் சொன்ன விதம் ராஜாராமனை தைத்தது.

கேசவன் மனைவி அதுவரை பேசாமல் இருந்தவ
வாய் திறக்கத் தொடங்கினாள்.

''மாமா.. வின்சென்ட் அண்ணா சொல்றதுதா
எனக்கும் சரியா பட்றது?''

அதை கேட்டு கேசவனே அதிர்ந்தான்.

''வைதேகி.. என்ன பேசறே நீ?''

''கடவுளுக்கு மன்னிக்கத் தெரியும். அனுக்ரகம்
பண்ணத் தெரியும். அள்ளிக் கொடுக்கத் தெரியும்.
அணைக்கத் தெரியும். இப்படி பேடி மாதிரி மறைஞ்சு
வந்து மிரட்டாது.''

''நீ சொல்றது ராமனுக்கும் கிருஷ்ணனுக்கும்

பொருந்தலாம். கருப்புக்கு பொருந்தாது. அது துஷ்ட
தெய்வம்...''

''தெய்வம் ஒண்ணுதான்... பேர்கள்தான் வேற வேற...!
துஷ்ட தெய்வம், நல்ல தெய்வம்கறதெல்லாம் நம்ம
வர்ணனை.'' வைதேகி கருத்து வின்சென்ட்டை கொஞ்சம்
பிரமிக்க வைத்தது.

''வைதேகி... நீங்க மனம் விட்டு பேசி நான் கேட்
டதே இல்லை. இப்பதான் கேக்கறேன். ஒண்டர்ஃபுல்.
இப்படித்தான் யோசிக்கணும்.''

''போதும்... வின்சென்ட் இந்த பேச்சை இதோட
விட்டுடு.''

''நான் விட்டுட்டேன். கல்யாண செலவுக்கு என்ன
பண்ணப் போறீங்க?''

''ஏதாவது பண்ணித்தானே ஆகணும். கழுத்து தாலி
முதல் கொண்டு வித்தாவது கல்யாணத்தை பண்ணிட்
றோம்.''

''கேசவா... எப்ப தெளிவாவும் துணிச்சலாவும்
யோசிக்கணும் ஆனா நீங்க எல்லாரும் ரொம்பவே
குழப்பத்தோடையும் பயத்தோடயும் யோசிக்கறீங்க.''

''இந்தாப்பா வின்சென்ட்... உன் அக்கறைக்கு
ரொம்ப சந்தோஷம். ஒரு நண்பன்னா இப்படித்தான்
இருக்கணும். நீ சொல்ற மாதிரியே கூட இது நற்செயல்
சம்பவமா இருக்கலாம். ஆனா எங்க மனசுல ஒரு
தயக்கம் வந்தாச்சு. ஆகையால இதை அப்படியே விட்டு
டுவோம். அதான் சரி...'' - ராஜாராமன் ஒரு முற்றுப்புள்ளி
வைத்து முடித்தார். வின்சென்ட்டாலும் அதற்கு மேல் எது
வும் பேச முடியவில்லை!

வார்டை விட்டு வெளியில் வந்தான். கேசவனும்
தொடர்ந்தான். பக்கத்து வார்டில் கிடந்த அபிராமியையும்
பார்த்தனர். அவளும் பொங்கிப் பொங்கி அழுதாள்.

அழுதபடியே, "கேசவா... ஆத்துக்கு போய் பாட்டின
பார்த்து நாங்க நல்லபடி குணமாயிடுவோம். எங்களுக்
எதுவும் ஆபத்து இல்லேன்னு சொல்லு. இல்லேன்ன
துடிச்சிப் போய் அதுலயே செத்தாலும் செத்துடுவா...
- என்று பாட்டியை பற்றி ஞாபகப்படுத்தினாள்.

"சரிம்மா நீ தைரியமா இரு..."

"நாங்க இருக்கறது இருக்கட்டும்... பாம்பு கடிபட்
உனக்கு எதுவும் இல்லையே..?"

"நான் நார்மலா இருக்கேம்மா. நீ தைரியமா இரு..
- அம்மாவை தேற்றிவிட்டு கேசவனும் வின்சென்ட்டு
வெளியே வந்தனர்.

பைக் காத்திருந்தது.

"கேசவா வா... உன்னை உன் வீட்ல ட்ராப் ப
ணிட்டு நான் புறப்பட்றேன்..."

"தேங்ஸ்டா... ஆமா உனக்கு இன்னும் எவ்வள
நாளைக்கு லீவு இருக்கு?"

"நான் இன்னிக்கே போகணும் கேசவா... எ
லீவு நேத்தே முடிஞ்சது. இன்னிக்கு ஒரு நாள் எக்
டெண்ட் பண்ணியிருக்கேன்."

"தேங்க்ஸ்டா... நீ இருந்ததாலதான் இங்க சி
விஷயங்கள் வேகமா முடிஞ்சது."

"இந்த ஃபார்மாலிடி பேச்செல்லாம் எங்கிட்
வேண்டாம் கேசவா. உனக்கும் எனக்கும் மூணு வயச
இருந்து பழக்கம். ஞாபகத்துல வெச்சுக்கோ."

"நான் எங்கேடா அதை மறந்தேன்?"

"அப்புறம் எதுக்கு தேங்க்ஸ், லொட்டு லொசுக்
எல்லாம்..."

- பைக்கை உதைத்து கிளப்பினான். கேசவ
தொற்றிக் கொண்டான். அதுவும் சீறத் தொடங்கியது.

8

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு ரசனை இருக்கிறது. இந்த ரசனை அந்த மனிதனின் பதினைந்து முதல் இருபது வயதுக்குள் உருவாகி அப்படியே அதுவே அடிப்படையாக அமைந்து விடுகிறது. இதன் பிறகு இந்த ரசனை பெரிய அளவில் மாறுவதே இல்லை. இப்படி பதினைந்து முதல் இருபது வயதுக்குள் உருவாகும் ரசனைக்கு அந்த மனிதனின் படிப்பு, பழக்கம், யோசிக்கும் விதம், அவன் நண்பர்கள், அவனது அக்கம் பக்கம் என்று எல்லோருமே காரணமாக இருக்கிறார்கள். இவர்கள் எப்படி இருக்கிறார்களோ அதை வைத்தே ரசனை உருவாகிறது. இந்த ரசனையின் அடித்தளத்தில் இருந்தே ஒருவன் எதிர்காலக் கனவுகளையும் காண்கிறான் என்பதே உண்மை. கிடைத்த வேலையை பார்ப்பது... திட்டமிட்டு இந்த வேலையில்தான் சேர வேண்டும் என்று தீர்மானிப்பது அல்லது தன் விருப்பத்திற்கு தொழில் புரிவது எல்லாமே இந்த ரசனையின் தளத்தில் இருந்ததுதான்... இங்கே தான் ஆய்வாளர்கள் ஒரு பேருண்மையை கண்டனர். ஒருவர் பெரிய நடிகராக வந்து அவரும் புகழ் பெற்று முன்னணியில் இருந்தார். அவர் ஆழ்மனதில் உயர்ந்த ரசனை குடிகொண்டிருந்ததோடு அதிலேயே இவருக்கான எதிர்காலம் இருப்பதால் அதுவே ஆசையாக கசிய ஆரம்பித்தது.

ஆம்!

நாம் என்னவாகப் போகிறோமோ அதற்கேற்பவே நம் ஆசைகளும் நமக்குள் உருவாகும். இது தான் ஆய்வாளர்கள் கண்டறிந்த உண்மை.

ஆசைப்படுவதை அடைவோம் என்பது எப்படி ஒரு பேருண்மையோ அதே அளவிற்கு அடைய இருப்பதையே ஆசையாகவும் கொள்வோம் என்பதும் ஒரு பேருண்மையாகும். இந்த கருத் திலும் கேள்விகள் எழும்பின.

'நான் ஆசைப்பட்டது நடக்கவில்லை. எனக்கு துளியும் பிடிக்காத வேலையில்தான் நான் இப்போது இருக்கிறேன். வாழ்க்கையில் பல விஷயங் கள் நம் விருப்பப்படி நடப்பதேயில்லை. அதன் விருப்பப்படிதான் நாம் வாழ வேண்டியுள்ளது. இப்படி இருக்க ஆசைப்பட்டதை அடைந்துவிடு வோம் என்பதை எப்படி ஏற்பது? என்பது அதில் ஒரு கேள்வி.

வீட்டு வாசலில் பைக் நின்றது. இறங்கி உள்ளே சென்று பார்த்தபோது அதிர்ச்சி காத்திருந்தது. உள்ளே பாட்டி இல்லை!

கச்சிதமாகப் பக்கத்து வீட்டு அம்மாவும் சேலை தலைப்பை கைகளில் துடைத்தபடி கேசவனையும் வின்சென்ட்டையும் நோக்கி வந்தாள்.

கேசவா உங்க பாட்டி இப்பதான் ஒரு டாக்சி பிடிச்ச கருப்பூருக்கு கிளம்பிப் போறாங்க...''

''என்னது... பாட்டி கருப்பூருக்கு போறாங்களா? - அது வும் தனியா?''

''ஆமாம்ப்பா... அவங்க தனியா போறது பிடிக்காம நான் என் மகள் தாரணியை கூட துணைக்கு அனுப்பி யிருக்கேன். வயசானவங்க - உடம்பு சரியில்லாதவங்கவேற - அதான் தாரணியை கூட அனுப்பினேன்.''

''என்னக்கா நீங்க... எனக்கு ஒரு போன் பண்ணி

இருக்கலாமே... இந்த பாட்டிக்கு இப்ப அங்க என்ன வேலை?'' - தவித்தான் கேசவன்.

''நானும் கேட்டேன்பா... இல்ல... நான் இப்பவே கருப்பன் கோயிலுக்கு போகணும். இல்லன்னா இந்த குடும்பத்துல ஒருத்தர் கூட உயிரோட இருக்க மாட்டாங் கன்னு மட்டும் சொன்னாங்க...''

''பாட்டி இப்படி பண்ணுவாங்கன்னு நான் எதிர் பார்க்கல... ச்சே!'' - கேசவனிடம் மனது நொதித்துப் போனது.

''கேசவா... அப்பா அம்மா எப்படி இருக்காங்க?''

''ஆபத்து இல்லை. தப்பிச்சிட்டாங்க...''

''அதாம்பா வேணும். ஆமா அந்த கருப்பசாமி என்ன அவ்வளவு துஷ்ட சாமியா?'' - பக்கத்து வீட்டம்மா வும் கருப்பிடம் வந்து நின்றாள். அதை கேட்க சலிப்பாக இருந்தது அவனுக்கு.

''ஆமாம்.. அதான் ஒருத்தருக்கு மூணு பேர் அடிபட் டுட்டோம். இப்ப பாத்து பாட்டி வேற போய் அடிபட ணுமா?''

''ஆங்... சொல்ல மறந்துட்டேன்... உங்க பாட்டி கைல அந்த வீட்டு பத்திரம் இருந்தது. அதையும் எடுத்து கிட்டு போயிருக்காங்க. இதை உண்டியல்ல போட்டு அவன் கால்ல விழறேன் - அப்பதான் அவன் இவங்கள எல்லாம் விடுவான்னு சொன்னாங்க...'' - அந்த பதில் வின்சென்ட்டைத் தான் அதிகம் பாதித்தது.

''கேசவா புறப்படு..''

''எங்க?''

''கருப்பூருக்குதான்...''

''நினைச்சேன்...''

''நினைச்சிக்கிட்டிருந்தா நேரம்தாம் போகும். உ
பாட்டியை போய் பார்ப்போம். இதை நான் அவங்களுக்
ஏதாவது ஆயிடும்கற பயத்துல சொல்லல. அவங்க பாவ
வயசானவங்கங்கற எண்ணத்துல சொல்றேன்.

அப்புறம் எனக்குள்ள இப்ப சின்னதா ஒரு சந்தேக
தோன்றியிருக்கு... அதையும் க்ளியர் பண்ணிக்கறேன்...''

''என்ன சந்தேகம்?''

''அதை அங்க வா சொல்றேன்...'' - வின்சென்
கேசவனோடு ஒரு அசுர வேகத்துக்கு மாறினான். கேச
னும் வீட்டை பூட்டி சாவியை பக்கத்து வீட்டு அக்க
விடமே கொடுத்துவிட்டு வின்சென்ட்டுடன் தாவி ஏற
னான்.

★ ★ ★

பைக் வின்சென்ட் வீட்டுக்குள் நுழைந்து ஒ
ஓரமாக நின்று கொண்டது. போர்ட்டிகோவில் கா
காத்துக்கொண்டிருந்தது. அதில் இருவரும் ஏறிக் கொள்ள
காரும் பாய்ச்சலெடுத்தது.

''சாரி வின்சென்ட்... என்னால உனக்கு திரும்ப
திரும்ப சிரமம்.''

''இந்த ஃபார்மாலிடி பேச்சை நீ விடவேமாட்டியா?''

''உனக்கு சிரமமாவே இல்லையாடா?''

''இல்லை... இதை நான் ரொம்ப இண்ட்ரஸ்டா
எஞ்ஜாய் பண்ணிக்கிட்டிருக்கேன். நாளைக்கே பெங்களூர்
போயிட்டா என் முன்னால கம்ப்யூட்டரும் மானிட்டரும்
தான் இருக்கும். ஒரு ஏ.சி. ரூமுக்குள்ள அடைஞ்சிகிட்டு
நான் எல்லாத்தையும் மறந்து வேலை பார்க்கணும்.

நான் பறந்து திரிய விரும்பற டைப்புன்னு உனக்கும்
தெரியும். ஆனா பணத்துக்காக அடைஞ்சு கிடக்கறேன்.

ஏதோ அபூர்வமா ஊருக்கு வந்த இடத்துல இண்ட்ரஸ்ட்டா ஒரு பிரச்னை சிக்கியிருக்கு. இதை நான் ரொம்ப எஞ்ஜாய் பண்றேன்டா...''

''இங்க எனக்கு படபடங்குது. ஆனா உனக்கு எஞ்ஜாய்புலா இருக்கா?''

''இப்பவும் சொல்றேன். கேசவன்... நடக்கற எதுக்கு ம் கருப்புசாமிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அவர் பாவம்டா...''

''ஹூம் உன்னை திருத்தவே முடியாதுடா...''

''திருந்த வேண்டியது நீதாண்டா... திரும்ப கேக்கறே னேன்னு என்ன தப்பா நினைக்காதே. கடவுள் வீடு கேட்டாரா?''

''இல்லை...''

''இருந்தும் கொடுத்தீங்க... அதுல அவர் வந்து வாழ்ந்தாரா?''

''இ... இல்லை.''

''இப்ப விக்க முடிவு எடுத்தீங்க... அவர் நிஜமா இருந்திருந்தா என்ன செய்திருக்கணும்?''

''என்ன செய்திருக்கணும்?''

''என்ன இது கொடுத்ததை திருப்பி எடுத்துக்கறீங் கன்னு நேர்ல வந்து கேட்கலாம்ல?''

''வின்சென்ட் தயவு செய்து பேச்சை மாத்துடா. எனக்கு தலையை வலிக்குது.'' - கேசவனின் அலுப்பான குரலைக் கேட்டு ரசனையோடு சிரித்துக் கொண்டான் வின்சென்ட்!

காரிடம் மட்டும் வேகக்குறைவே இல்லை!

★ ★ ★

கருப்பு கோவில்!

பாட்டி வந்திருந்த கார் தேங்கி நிற்க பாட்டி இ
இறங்கினாள்.

தாரணி துணை புரிந்தாள்.

கோவிலில் பூசாரி இருந்தார்.

பாட்டியை பார்த்துவிட்டு ஓடி வந்தார்.

''வாங்க பாட்டியம்மா... நல்லா இருக்கீங்களா?''
என்று அவரிடம் நலம் விசாரிப்பு.

''நல்லா இருக்கணும்னு தான் முடியாத வயசுலயு
புறப்பட்டு வந்துருக்கேன். அந்த காலத்துல பிள்ளைக
பெத்தவங்களுக்கு பேர் எடுத்துக் கொடுத்தாங்க. ஆ
இப்ப பெத்தவங்க பேரை கெடுத்து குட்டிச்சுவர் ஆக்கி
வாங்க போல இருக்கு...'' - பூசாரி கேட்ட கேள்விக்
நல்லா இருக்கேன் என்று ஒரு பதிலை கூறாமல் பாட்
புலம்பவும் பூசாரிக்கு குழப்பமாகிவிட்டது. பாட்டியி
கையில் பத்திரத்தை பார்க்கவும் புரியத் தொடங்கிவிட்ட

''அது என்ன பாட்டிம்மா... கைல வீட்டு பத்திரமா?''

''பத்திரமேதான்... இந்த கருப்பனுக்கு சேர வேண்
டியது. என் வீட்டுக்காரர் இதை கொடுக்காம வெறும்
வார்த்தைல என் வீடு இனி கருப்பன் சொத்துன்னு
சொன்னது தப்பா போயிடிச்சு. அதான் என் மகனும்
பேரனும் புத்தி கெட்டு போய் வீட்டை விக்கப்
போறோம்னு கிளம்பிட்டாங்க.''

''ஐய்யய்யோ அது பெரிய தப்பாச்சே?''

''அந்த தப்புக்குதான் பேரனை பாம்பு கடிச்சிச்சு.
பையனையும் மருமகளையும் கார் ஆக்சிடெண்ட் பலி
வாங்க தெரிஞ்சது...''

''கருப்பா நீ பொங்கி எழுந்திட்டியா?''

''பொங்கி எழறதா? - புரட்டியே போட்டுட்டான். போதும் பூசாரி... போதும்... கற்பூரம் காட்டுங்க. இதோ வீட்டு பத்திரம்! இங்க இவன் காலடில வெச்சுட்டேன். இனி என் குடும்பத்தவங்களுக்கு எதுவும் நடக்கக்கூடாது. அவங்க யார் மேலயும் ஒரு துரும்பு படக்கூடாது. பட்டா இவன் சத்தியமான கடவுள் கிடையாது...'

''இப்ப உங்க பேரன் ஊருக்கு வந்துட்டு போனது அதுக்காகத்தானா?''

''ஆமாம்... அப்படி வந்த இடத்துலதான் பாம்பு கடிபட்டிருக்கான் போல. அதை கேள்விப்பட்டதும் என் மூச்சே நின்னு போச்சு தெரியுமா?''

''இருக்காதா பாட்டிம்மா... ஒரே பேரன் ஆச்சே...?''

''சரி சரி கற்பூரத்த காட்டுங்க... பத்திரத்தை எடுத்து அவனோட ஆபரணப் பெட்டில வையுங்க. வீட்டு பத்திரம் இல்லாத வீட்டை இவங்கதான் எப்படி விக்கறாங்கன்னு பாக்கறேன்...'' - பாட்டியிடம் வைராக்யம் சுடர்விட்டது. பத்திரம் எங்கே இருக்க வேண்டும் என்றும் பாட்டி சொன்னது பூசாரிக்கே ஆச்சரியம்.

கட்டிக் கற்பூரத்தை எடுத்து கொளுத்தினார்.

பின் கை நிறைய விபூதி எடுத்து உள்ளங்கையில் வைத்துவிட்டு பாட்டியின் நெற்றியிலும் பூசிவிட்டார்.

பாட்டி கைகளை கூப்பினாள். பரவசத்தில் கண்களில் கண்ணீர் திரண்டது. ''கருப்பா... என் குல தெய்வமே! என் வீட்டுக்காரர் செய்த சத்தியத்தை நான் காப்பாத்திட்டேன். என் குடும்பத்துல என் மகனும் பேரனும் தப்பு பண்ணியிருந்தா மன்னிச்சிடு. இனி பண்ண மாட்டாங்க. அதுக்கு நான் பொறுப்பு. கல்யாணத்துக்கு பணம் இல்லேங்கற காரணத்தாலதான் அவங்களுக்கு இந்த எண்ணமே வந்தது.

பணம் இல்லேன்னா பணத்தை உன்கிட்ட கேட்
லாம்.

அதை விட்டுட்டு உனக்கு கொடுத்ததை திருட்டு
தனமா எடுத்துக்க நினைச்சா எப்படி?

அவங்களுக்கெல்லாம் நிஜமா நீ இருக்கியே
இல்லையோன்னு ஒரு சந்தேகம். இந்த கிராமத்துல
இருந்தவரை வராத சந்தேகம் பட்டணத்துக்கு போகவும்
வந்தாச்சு.

அதான் பட்டணம். அது தானும் நம்பாது - யாரையும்
நம்பவும் விடாது.

நம்பணும்... எதையும் தீர்மானமா உறுதியா நம்ப
ணும்.

நான் நம்பறேன். நீ இருக்கே... நீதான் தண்டனை
கொடுத்து எச்சரிக்கையும் செய்திருக்கே. ரொம்பவே
கோபப்பட்டிருந்தா நீ உயிரை வாங்கியிருப்பே. ஆனா
என் புருஷன் பக்திக்காக என்னோட பக்திக்காக தட்டிட்டு
விட்டுட்டே.

நீ காத்து... எல்லா இடத்துலயும் நிரம்பியிருக்கறவன்.

இப்ப நான் பேசினதும் உன் காதுல விழுந்துருக்கும்.

உன்னை நம்பற என்னை கைவிட்டுடாதே. என்
பேத்தி கல்யாணம் நல்லபடியா முடியணும். நகை
வாங்கத்தான் பணம் இல்லாம என் மகன் கஷ்டப்பட்
றான். அதுக்குதான் இந்த வீட்டை வித்தா என்னன்னும்
அவன் நினைச்சான். இவ்வளவுதான் விஷயம். எல்லாத்
தையும் இப்ப நான் உன்கிட்ட கொட்டிட்டேன். நான்
புறப்பட்றேன். இனி நீ பாத்துக்கோ..” - பாட்டி பிரார்த்
தனை என்கிற பெயரில் ஒரு புலம்பு புலம்பிவிட்டு திரும்
பினாள். எதிரில் கேசவனும் வின்செண்ட்டும் நின்று
கொண்டிருந்தனர். கேசவன் கண்கலங்கிவிட்டிருந்தான்.

“பாட்டி...”

“என்னை தேடிண்டு இங்கேயே வந்துட்டியா?”

“வராம... ஆனாலும் உனக்கு உறுதியான மனசு பாட்டி.”

“உறுதியான மனசா...? அடபோடா..! பயந்துபோய் நான் ஓடி வந்துருக்கேண்டா.”

“பயப்பட வேண்டியதுக்கு பயப்பட்டுதானே தீரணும் பாட்டி?”

“அந்த பயம் உங்களுக்கு இல்லாம போச்சே...?”

“இப்ப வந்தாச்சு பாட்டி. இப்ப வந்தாச்சு. இனி நாங்க உன் விருப்பப்படிதான் நடப்போம்.”

“பட்டா தான் புத்தியே வரது.. இல்ல?”

“ஆமாம் பாட்டி... சரி சரி புறப்படு. இந்த உடம்போட நீ இவ்வளவு தூரம் வந்ததே தப்பு.. தாரணி உனக்குதான் நான் தேங்க்ஸ் சொல்லணும்.”

“ஐயோ இதுல என்ன மாமா இருக்கு...?”

“இரண்டு பேரும் சேர்ந்து நில்லுங்கோ ஒரு போட்டோ எடுத்துக்கறேன்” என்றவன் பாட்டி தாரணி இருவரையும் ஒன்றாக நிறுத்தி வைத்து தன் மொபைல் கேமராவால் படமும் எடுத்தான். அப்போதுதான் வின்செண்ட்டுக்கு தன் மொபைல் ஞாபகம் வந்தது. அதற்காக பாக்கெட்டில் கையை விட்டபோது பகீர் என்றது. அதை காணவில்லை!

“என்ன வின்செண்ட்?”

“என் மொபைலை காணோம்...”

“எங்கடா தொலைச்சே?”

“அது காணாம போனதே இப்பதான் தெரியும்... எங்க தொலைச்சேன்னா...?” - பதிலோடு தீவிரமாக யோசித்தான் வின்செண்ட்.

''ஆமா அது என்ன வின்சென்ட்டுன்னு சோடா பேரை இவர் வெச்சுகிட்டிருக்காரு. இவர் நம்ம ஆளு இல்லையா?'' என்று இடையில் நுழைந்தது பூசாரியின் கேள்வி.

''அதுவா பூசாரி.. இவனோட அப்பா பரமசிவம் வின்சென்ட் சோடா ஃபாக்டரியோட ஏஜென்ட்டா இருந் தார். அதனால இவங்க குடும்பத்துக்கே வின்சென்ட் வீடுன்னு ஒரு பேர் வந்துருச்சு. இவன் பேர் ராமச்சந் திரன். ஆனாலும் வின்சென்ட் ராமச்சந்திரன்னாதான் எல்லாருக்கும் தெரியும்...'' - வின்சென்ட்டின் பெயர் காரணம் தெரிய வந்த வினாடி வின்சென்ட்டும் 'எங்கே செல் தொலைந்தது?' என்பதை கண்டுபிடித்துவிட்டதை போல முகம் மலர்ந்தான்.

''என்னடா கண்டுபிடிச்சிட்டியா?''

''உம். இப்பதான் ஞாபகம் வருது - அது இப்ப இங்க அந்த கருப்பு வீட்லதான் கிடக்கு...''

''என்னது... எங்க வீட்லையா?'' கேசவன் பதறிப் போனான்.

''உங்க வீடா... அதான் பத்திரத்த முதல் கொண்டு கொடுத்துட்டீங்களே.. எங்க இருந்து வந்தது உங்க வீடு. அது இனிமே கருப்பு வீடு...''

''சரிடா... அங்க தான் தொலைஞ்சதுன்னு உறுதியா சொல்றியா?''

''ஆமாம்... அங்கதான் உன்னை பாம்பு கடிக்கவும் உன்னை குனிஞ்ச வளைஞ்சு தூக்கினேன். விழுந் திருந்தா அங்க தான் விழுந்திருக்கணும்.''

''ஏன் வேற எங்கேயாவது?''

''வேற எங்கையும் நான் குனிஞ்சு நிமிறலை. அத வெச்சுதான் சொல்றேன்...''

''சரி இது அப்பவே உனக்கு தெரியலியா?''

''தெரியலடா... மொபைல் தேவைப்படும்போது தானே தேடுவோம்? இடையில் போன் ஏதாவது வந்து இருந்தா தெரிஞ்சிருக்கும். ஆனா கைல இல்லாததால அது வும் தெரியாம போச்சு...''

''சரி இப்ப என்ன பண்ணப் போறே?''

''அந்த வீட்டுக்கு போய் எடுத்துகிட்டு போய்கிட்டே இருக்க வேண்டியதுதான்...''

''அப்ப திரும்ப அங்க போகப் போறோமா?''

''ஏன் போனா என்ன... ஒரு காரணமாதானே போறோம்?'' - அவர்கள் பேச்சை கேட்டபடி இருந்த பாட்டி.

''கேசவா நீயும் கூட போ... தொலைஞ்சு போன போனை தேடி கண்டுபிடிச்சு எடுத்துண்டு புறப்பட்டு வாங்க. வரும்போது ஒரு பொட்டு மண்கூட உங்க உடம் புல ஒட்டிண்டு இருக்கக்கூடாது. அது கருப்பன் சொத்து'' என்றாள் பாட்டி.

''ஆமா பாட்டி... இனி கருப்பனே வந்து வீட்டை க்ளீன் பண்ணி வெள்ளையடிச்சு வீட்டை வீடா வெச்சுக் கப் போறார்....'' - என்றான் வின்சென்ட் சற்று கிண்டலாக.

பாட்டிக்கும் அவன் கிண்டல் புரிந்தது.

''அது அவன் விருப்பம்... சுத்தம்கற தெல்லாம் உனக்கும் எனக்கும் ஒருவிதம்னா அவனுக்கு இன்னொரு விதம். கிண்டல் பண்ணாம போய் போனை எடுத்துண்டு வந்து சேருங்கோ. நான் முன்னால கிளம்பி போயிண்டே இருக்கேன்...'' - என்றபடி திரும்ப ஒருமுறை கருப்பச்சா மியை கும்பிட்டுவிட்டு தாரணியுடன் தான் வந்த டாக்சி யில் ஏறிக் கொண்டாள். அவர்களும் அந்த வீடு நோக்கி திரும்பவும் நடக்கத் தொடங்கினர்.

9

''மனம் பற்றிய எல்லா ஆய்வுகளுமே பொதுவான ஒரு உண்மையை ஒப்புக்கொள்கின்றன. ஒரு மனம் தீவிரமாக நம்பும் ஒரு விஷயம் உண்மையாகி விடுகிறது என்பதுதான் அது! என்றால் அது பொய்யாக இருந்தது - நம்பிக்கையின் தீவிரத்தால் உண்மையானது போல் ஒரு கருத்து ஏற்படுகிறது. இதை இப்படி பொருள் கொள்ளக்கூடாது. ஒரு நூறு சதவிகிதப் பொய்யை எந்த மனமும் உண்மை என்று நம்புவதில்லை.

இராமாயணமும் சரி இராமன் அவதார புருஷன் என்பதும் சரி புராண கற்பனையே. அது உண்மையாக இருக்க வாய்ப்பே இல்லை என்று சிலர் கூறிட அதை துளியும் சந்தேகத்துக்கு இடமின்றி நம்பி ஏற்றுக்கொண்டவர்கள்தான் அதிகம்.

அவர்களில் ஒருவர் பத்ராசலராமதாசர். அந்த நம்பிக்கை காரணமாக இவர் அரசாங்க வரிப் பணத்தை எடுத்து இராமனுக்கு கோவிலும் கட்டிவிடுகிறார். இதனால் ராமதாசரை அரசன் தண்டித்து சிறையில் போடுகிறான். அவரோ ராமன் தன்னை காப்பாற்றுவான் என்று நம்புகிறார். அதேபோல் தான் நடக்கவும் செய்தது. ராமனே நேரில் வந்து வரிப்பணத்தை அரசனிடம் செலுத்தி இராமதாசரையும் விடுவிக்கிறான்.

வந்தது ராமனே என அரசன் அறிந்தபோது தான் ராமதாசரின் நம்பிக்கையின் பலம் எப்படிப்பட்டது என்பது தெரிய வந்தது!

நம்பிக்கை இதுபோல் பல சாகசங்களையும் நிகழ்த்திக் காட்டியுள்ளது.

கருப்பூர் தெருவுக்குள் வின்சென்ட்டின் கார் நுழையவும் தெருவே திரும்பவும் ஆச்சரியமாக பார்த்தது. போகிற வழியில்தான் இருந்தது மணியக்காரரின் வீடு. அவரும் வாசலில் யாருடனோ நின்று பேசிக் கொண்டிருந்தார். வின்செண்ட்டின் காரை ஆச்சரியமாகப் பார்த்தார்.

''வின்செண்ட்... நம்மளை பாக்கறவர் தான் மணியக்காரர்...''

''ஓ இவர்தானா..? இவர்தான் உன்னை இங்க பாம்பு கடிக்கவும் உங்க அப்பா அம்மாவுக்கு போட்டு விட்டவரா?''

வின்செண்ட் கேட்டபடியே காரையும் அவரை ஒட்டி நிறுத்தினான்.

''ஏண்டா காரை நிறுத்திட்டே?''

''இறங்கு... அவர்கிட்ட இரண்டு வார்த்தை பேசணும்.''

''அவர்கிட்ட பேச என்னடா இருக்கு?''

''அதை பேசும்போது கேட்டு தெரிஞ்சிக்கோ'' - வின்செண்ட் காரை விட்டு மளமளவென்று இறங்கி அவர் முன்னால் சிரித்தபடியே சென்று நின்றான். அவரும் பதிலுக்கு வெறித்து பார்த்தார்.

''நீங்கதான் மணியக்காரரா?''

''ஆமாம்...''

''ஊர்ல எது நடந்தாலும் உங்களுக்கு அது உடனே தெரிஞ்சிடும் போல இருக்கே.''

''வின்செண்ட் கொஞ்சம் சும்மா இருடா... சாரி மணியக்கார்ரே... வின்செண்ட் என் ஃப்ரெண்ட் தப்பா எடுத்துக்காதீங்க.'' - இடையில் புகுந்து கேசவன் சமாளித்தான்.

"உள்ள வாங்க தம்பி..." - மணியக்காரர் அவர்க இருவரையும் உள்ளே அழைத்தார்.

"இருக்கட்டும்... நிறைய வேலை இருக்கு இ னொரு சந்தர்ப்பத்தில் வரோம்."

"இன்னொரு சந்தர்ப்பத்துலயா வருவீங்களா?"

"ஏன் அப்படி கேக்கறீங்க?"

"உங்க பாட்டி வீட்டு பத்திரத்தையே கருப்புகிட் ஒப்படைச்சிட்டாங்க போல இருக்கு."

"ஆ.. ஆமாம்..."

"அட.. அதுக்குள்ள அந்த விஷயமும் உங்களுக் தெரிஞ்சிடிச்சா?"

"வின்சென்ட்... இவர் மணியக்காரர் - இவருக் எல்லா விஷயங்களும் தெரிஞ்சாகணும். அதை புரி சுக்கோ."

"அதை நானும் மறக்கல. ஆனா நடந்து அஞ் நிமிஷம் கூட ஆகலை. அதுக்குள்ள தெரிஞ்சிருக்கேன்னு தான் நான் ஆச்சரியப்பட்டேன்."

"இந்த ஊர் என்ன உங்க மதுரை மாதிரி பெரிய நகரமா என்ன? மொத்தமே அஞ்சாறு தெருக்கள்தான். அதான் எது நடந்தாலும் எனக்கு தெரிஞ்சிடுது" - என்று மணியக்காரரும் சமாளித்தார்.

பெயரில்தான் அவர் மணியக்காரர். மற்றபடி பார்ப் பதற்கு சினிமா நடிகர் மாதிரி நல்ல மேக்கப்பில் உடம் பில் கும்மென்று ஜவ்வாது வாசம் கமழ இருந்தார். கழுத்தில் தடித்த மைனர் செயின். வீட்டு வேலைக்காரி வீடு கூட்டிக் கொண்டிருந்தாள். வயதுப்பெண்! கூட்டும் போது அவளை மணியக்காரர் நோட்டம் போட்ட விதத் திலும் சரியான குறும்பு - வின்சென்ட் அவரை ஒரு மதன காமராஜனாகத்தான் பார்த்தான்.

"உக்காருங்க, என்ன சாப்பிட்றீங்க?" என்று உபசரிக்க ஆரம்பித்துவிட்டார் மணியக்காரர்.

"ஐயோ நேரமாகுதுங்கய்யா..."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல... இனிமே தான் இந்த ஊர் பக்கமே நீங்க வரப்போறதில்லையே! ஆகையால இன்னிக்கு என் வீட்ல இருந்து சாப்ட்டுட்டு தான் போகணும்" என்று இழுத்தார்.

"இவங்க வரப்போறதில்லையா - யார் சொன்னது?" - வின்சென்ட் நறுக்கென்று கேட்டான்.

"கருப்பு இவ்வளவு தூரம் தண்டிச்சதுக்கு பிறகு யாருக்கு இங்க திரும்ப வர மனசு வரும். பத்திரம் மட்டும் தான் கொடுக்க வேண்டி இருந்தது. அதையும் ஒப்படைச்சாச்சு. இனி என்ன வேலை?"

"இனி தான் வேலையே... இனிமேதான் எந்த குற்ற உணர்ச்சியும் இல்லாம தைரியமாவும் வரலாம்" என்ற வின்சென்ட்டை சற்று லேசான அதிர்ச்சியோடும் பார்த்தார் மணியக்காரர்.

அப்போது அவர் எதிரில் ஒருவன் மாடியில் இருந்து இறங்கி வந்து நின்றான்.

பார்க்க கம்பீரமான தோற்றம். ஜீன்ஸ் பேண்ட் சட்டை என்று பார்க்க மிக நாகரீகமாகவும் தெரிந்தான்.

"மாமா... நான் மதுரை வரை போய் டிக்கட் புக் பண்ணிட்டு வந்துட்றேன். மதுரையில் இருந்தே ஹைதராபாத்துக்கு டைரக்டா ஃப்ளைட் இருக்குதாட்டம் தெரியுது. இப்பதான் நெட்ல பார்த்தேன். உங்களுக்கும் சேர்த்து டிக்கெட் போட்டுட்றேன். ஹைதராபாத்ல இருந்து தாய்லாந்துக்கு நிறைய ஃப்ளைட்ஸ் இருக்குது. நாம அப்படியே போயிடலாம்" என்றான்.

அவரோ அதைக் கேட்டு தெளிந்தார்.

''சரி சரி... நீ புறப்படு'' - என்று அவனை வெ
துரத்தப் பார்த்தார். அவனும் விலகினான். அவன்
ஸ்ப்ரே வாசம் தூக்கியது. கேசவனும் அவனை ஆச்
மாகப் பார்த்தான்.

''இவன் என் மச்சினன். என் சம்சாரத்தோட க
தம்பி. வெளிநாட்டுல இருந்து இப்பதான் வந்துருக்கா
வெளிநாடுகளுக்கு இவன் போய்ட்டு வர்றதுங்கறது ச
சாதாரணம்'' என்று அசட்டு சிரிப்போடு பேசி சமாளித்தா

''அங்க என்ன வேலை பாக்கறார்?''

''அங்க அங்க... ஆங் இந்த ஏத்துமதி இறக்குமதி...''

''ஏற்றுமதி இறக்குமதின்னா... எதை?''

''அதெல்லாம் எனக்கு தெரியாது... நான் அ
எல்லாம் கேட்டுக்கறதில்ல. நமக்குதான் ஊர் வேலை
தலைக்கு மேல் இருக்குதே?''

''ஆனாலும் இதுக்கு நடுவுல வெளிநாட்டுக்கெ
லாம் போறீங்க போல இருக்கு...''

''நானா-வெளிநாட்டுக்கா?''

''நீங்களேதான் - இப்பதானே தாய்லாந்துக்
போய்ட்டு வர உங்களுக்கும் சேர்த்து டிக்கட் போட்டு
றேன்னார்...'' - வின்சென்ட் இப்படி மடக்குவான் என்
அவர் எதிர்பார்க்கவில்லை.

''அ... ஆமாம் ஆமாம்... அது ரொம்ப நாளா என்
கூப்பிட்டுக்கிட்டு இருக்கான்... சரி ஒரு தடவை போ
சுத்திப் பார்த்துட்டு வருவோமேன்னுதான்...'' அவ
தொடர்ந்து அசட்டு சிரிப்பைத் தொடர்ந்தார். இடையில்
கூல்ட்ரிங்க்ஸ் வந்தது. காஸ்ட்லியான பழரசக் கோப்பை
யில் வைத்து தந்தாள் வீட்டு வேலைக்காரி.

ஒரு கோப்பை விலையே அஞ்சாயிரம் போகும்!
வின்சென்ட் மனதுக்குள் பூச்சி பறக்கத் தொடங்கியது. பழர
சத்தை குடித்தபோது புதிய சுவை.

''எப்படி இருக்கு? ஜெனிவா திராட்சை ரசம்'' என்றார்.
கருப்பூருக்குள் ஜெனிவா திராட்சை! எங்கெல்லாமோ இடித்
தது வின்சென்ட்டுக்கு.

குடித்து முடித்துவிட்டு புறப்பட்டான்.

''கருப்பை நல்லா கும்புட்டுகிட்டீங்க தானே?''

''ஆமாம் மணியக்காரரே...''

''ரொம்ப துடியான தெய்வம்... உங்ககிட்ட பத்திரத்தை
வாங்கதான் கொஞ்சம் விளையாட்டு காட்டியிருக்கு... இனி
ஜாக்ரதையா இருங்க...''

''நிச்சயமா...''

''பாத்து போய்ட்டு வாங்க...'' - வழியனுப்பி வைத்
தார் மணியக்காரர்.

வெளியே வந்து காரிலும் ஏறிக் கொள்ள கார் கிளம்பி
யது. வின்சென்ட் தீவிரமாக யோசித்தபடியே வந்தான்.

''என்ன வின்சென்ட்... மணியக்காரரை பார்த்ததுல
இருந்து உனக்குள் நிறைய குழப்பம் போல இருக்கே?''

''உனக்கு இல்லையா?''

''குழம்பறதுக்கு என்ன இருக்கு... நான் பார்க்க சாதார
ணமா இருந்தார். இப்ப கொஞ்சம் பகட்டோட இருக்கார்.
வீடும் உள்ள மாறியிருக்கு.''

''இவ்வளவுதானா?''

''இவ்வளவுதானான்னா?''

''இவர் நிறைய தப்பு பண்றார்னு எனக்கு படுது...''

''தப்பா?''

''ஆமாம்...''

''எதை வெச்சு சொல்றே?''

''பேர்லதான் மணியக்காரர். ஆனா காண்டாக் தாய்லாந்து வரைல. நாம ஜூஸ் சாப்பிட்டோமே அ கண்ணாடி கப்போட விலை எவ்வளவு தெரியுமா?''

''என்ன ஒரு அம்பது ரூபா இருக்குமா?'' என்ற கேசவன்.

அதைக் கேட்டு சிரித்த வின்சென்ட், ''அஞ்சாயிரத்து குறையாது'' என்று கூறவும் பகீரென்றது கேசவனுக்கு.

''நிஜமாவா வின்சென்ட்...''

''நான் ஐ.டி. கம்பெனில வேலை பாக்கறவ ஏராளமா பார்ட்டிகளை அட்டெண்ட் பண்றவன். சொன்ன நம்பு.'' - வின்சென்ட் சொல்லி முடிக்கவும் வீட்டு வாச வரவும் சரியாக இருந்தது.

காரை நிறுத்திவிட்டு இறங்கினர்.

இந்த முறையும் தெருவில் உள்ளவர்கள் வேடிக்கை பார்த்தனர்.

அதை லட்சியம் செய்யாமல் உள்ளே நுழைந்தனர்.

''டேய்... கருப்பை மனசுல தியானம் பண்ணிண்டு தேடு - இல்லன்னா திரும்ப அந்த பாம்பு வந்துடப் போ றது.''

''வரட்டும்.. இந்த தடவை அதுக்கு பரலோகம் நிச்சயம்...'' - என்றபடியே செல்போனை தேடியவன் வீட்டு மையத்தில் முற்றம் அருகே வந்தான்.

முன்பு பார்த்தபோது இருந்த கடப்பை கல் இந்த முறை திரும்பிக் கிடந்தது. கூர்ந்து பார்த்தான்.

''என்ன பாக்கறே - சீக்கிரமா உன் செல்லை தேடு. வேணும்னா நான் உன் நம்பரை ரிங் பண்றேன். சத்தம் கேட்கும்தானே?''

''பண்ணு...''

கேசவனும் அவன் நம்பருக்குள் அழைப்பு விடுக்க ஒரு புதரில் இருந்து ரிங் டோன் கேட்டது. போய் எடுத்து வந்தான்.

''அப்பா கிடைச்சாச்சு...'' என்று நிம்மதியானான்.

''சரி சரி புறப்படு - இனி ஒரு நிமிஷம் இங்க நிற்கக் கூடாது...''

''போடா பைத்தியக்காரா... இனிதாண்டா இங்க நிறைய வேலையே இருக்கு...''

''என்ன சொல்றே வின்செண்ட்...''

''நீ ஒரு மொண்ணையன்டா... சரியான கடிவாளம் பூட்டின குதிரை. எப்பவும் ஒரே பார்வைதான்...''

''நீ பேசறதே புரியல...''

''எப்படி புரியும்? பயமும் சுயநலமும் முட்டாள் தனங்களும் நிரம்பியிருக்கும்போது எதுவுமே புரியாது தான். போகட்டும் என்கூட வா...''

''எங்க?''

''வாடான்னா...'' - அதட்டலாக அழைத்துக் கொண்டு வீட்டு முற்றம் அருகே சென்றான்.

''இங்க என்ன இருக்கு?''

''குனிஞ்சு கடப்பை கல்லை பார்''...''

''அதுக்கு என்ன?''

''பார்த்துட்டு சொல்லுடா...''

''உம் பார்த்தாச்சு.''

''என்னத்த பார்த்தே?''

''கல்லை...''

''கொடுமைடா... அது நீ முந்தி பார்த்தபோது எப்படி இருந்தது இப்ப எப்படி இருக்கு?''

''கல்லு எப்பவும் கல்லாதானே இருக்கும்?'' - என்று கேட்டான் திரும்ப கீழே பார்த்துவிட்டு மெல்லிய குரலில்.

''கல்லு மாறிக் கிடக்கற மாதிரி தெரியறது...'' என்றான்.

''அது மட்டுமில்ல... குனிஞ்சு முகர்ந்து பார்...''

''முகர்ந்து பார்த்தான். பின் ''வாசனை அடிக்கறது'' என்றான்.

''என்ன வாசனை?''

''ஜவ்வாது வாசனை...''

''இது அந்த மணியக்காரன் மேலயும் அடிச்சிச்சே ஞாபகம் இருக்கா?''

''ஓ... நீ அப்படி வரியா - அப்ப அவர் இங்க வந்து இருக்காரா?''

''வந்துருக்காராவா - அவர்தான் உன் மேல பாம்பு போட்டவர். அவர்தான் உன் அப்பா அம்மா கார் ஆக்சி டெண்ட் ஆகவும் காரணமா இருந்தவர்.''

''வின்சென்ட்...''

''என்ன வின்சென்ட்...? எதை வெச்சு சொல்றேன்னு கேக்கறியா? எனக்கு ஒரே ஒரு நம்பிக்கைதான்... தெய்வம் எப்பவும் சீப்பால்லாம் மிரட்டாது.. உங்க தப்பை உங்களுக்கு உணர்த்தறதுன்னு கருப்பன் முடிவு செய்திருந்தா இப்படி பாம்பை ஏவிவிட்டு மிரட்ட தேவை யில்லை.

உன் அப்பா கனவுல வந்து வேண்டாம்னு சொன் னாலே போதும். உன் அப்பா ஆடிப் போயிருப்பார். அதெல் லாம் கருப்புங்கற தெய்வம் இருந்திருந்தா...!

இப்ப அது இருக்கோ இல்லையோ.. அதை தூக்கி அப்படியே வை.

இந்த கடப்பை கல்லுக்கு கீழே நிச்சயமா என் னவோ இருக்கு. அதை நான் பாத்துட்டா கச்சிதமா கணக்கு போட்டுடுவேன்...'' - வின்சென்ட் பேச்சோடு வேகமாக கல்லை தூக்கி பக்கத்தில் வைத்துவிட்டு சுற்றிப் பார்த்தான். கூரை சரிவில் ஒரு கடப்பாரை செருகப்பட் டிருந்தது.

அதை எடுத்துத் தோண்டத் தொடங்கினான். கேசவ னுக்கு எல்லாமே கனவு போல இருந்தது. சில அடி ஆழத் திலேயே பெரிய மரப்பெட்டி ஒன்று இருந்தது. அதை தொட்டு தூக்கி திறக்கவும் நெஞ்சையடைத்தது. உள்ளே பாளம் பாளமாக தங்க பிஸ்கட்டுகள். அவ்வளவிலும் மேல்நாட்டு முத்திரைகள்!

''வின்சென்ட்....''

''பார்... அவ்வளவும் தங்கம்! கடத்தல் தங்கம்... உங்க மணியக்காரர் வேலை. அவர் வீட்ல பார்த்தோமே ஒரு தடியனை...? அவன்தான் அவர் பிசினசுக்கு ஏஜெண்டா இருக்கணும்.

பொதுவா கடத்தல் தங்கம் ரொம்ப ரொம்ப பாது காப்பான இடத்துலதான் எப்பவும் இருக்கும். இந்த ஊர்ல இந்த பாழடைஞ்ச வீடு அதுக்கு ரொம்ப யூஸ்ஃபுல்லா இருந்துருக்கு. போதாக்குறைக்கு கருப்பு வீடுங்கற முத்திரை வேற! உன் மணியக்காரர் கில்லாடி.

உங்க வேண்டுதல் பிரார்த்தனையை தனக்கு சாதகமா பயன்படுத்திக்கிட்டிருக்கார். ஒரு வகைல புத்தி சாலியும்கூட...!

கருப்பு நிஜமா இருந்திருந்தா இவரை எப்பவோ உண்டு இல்லை பண்ணியிருக்கும். அது ஒரு கிராமத்து நம்பிக்கை மட்டுமேங்கற உண்மை மணியக்காரருக்கு தெளிவா தெரிஞ்சிருக்கு. கில்லாடியில்லையா? தூள் கிளப்பிட்டார்.''

வின்சென்ட் விளக்கம தரத்தர கேசவனுக்கு ம
கூச்சமாக இருந்தது. கோபம் வந்தது. தான் எவ்வள
தூரம் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதும் தெரிந்தது.

'என்ன மௌனமாயிட்டே...?''

''இப்ப கூட நாம இதை கண்டுபிடிச்சிட்டு எ
வீசிக்கிட்டு போயிட முடியாது. இங்க நாம என்ன செய்
றோம்கறத எங்கையாவது கேமரா வச்சு கவனிச்சுகிட்
இருக்கலாம். இந்த உண்மை உன் பாட்டிக்கு தெரிஞ்
என்னாகும்னு யோசிச்சுப் பார்...'' வின்சென்ட் கேட்கவு
கேசவனுக்கு நெஞ்சை கரித்தது.

''உன் பாட்டிக்குத்தான் என்ன ஒரு நம்பிக்கை
ஆனா அந்த நம்பிக்கையை பயன்படுத்தி இங்க ஒருத்த
திருட்டு வேலை பண்ணிகிட்டிருக்கான். இதுதான் இ
றைய உலகத்தோட லட்சணம். இதை என்னைப் போல
யாராவது எடுத்துச் சொன்னா அவங்க முட்டாள்கள்
நம்பிக்கை இல்லாத அறிவிலிகள்னு நினைக்க வேண்
டியது...?''

''போதும் வின்சென்ட்... என்னால இனி தாங்க
முடியாது. அந்த மணியக்காரரை...''

''என்ன பல்ல கடிக்கறே... உன்னாலயும் என்னால
யும் அவரை எதுவும் பண்ண முடியாது. இப்பத்தான்
நமக்கு ஆபத்தும் அதிகம்.

தொலைஞ்சு போன செல்போனுக்குத்தான் நான்
நன்றி சொல்லணும். இல்லேன்னா இவ்வளவு பெரிய
உண்மை தெரிய வந்துருக்குமா?''

''சரி இப்ப என்ன செய்யலாம்?''

''முதல் வேலையா மதுரை கலெக்டருக்கு தகவல்
தரேன். ஏன்னா அவரை எனக்கு நல்லா தெரியும். அவர்

அடுத்து என்ன செய்யணுமோ செய்யட்டும். நாம
இப்ப இந்த மணியக்காரன் கைல சிக்கிடாம தப்பிக்
கறதுல தான் நம்ம சாமர்த்தியம் இருக்கு...''

''அப்ப வா வேகமா போய் கார்ல ஏறி ஓடிடு
வோம்...''

''போடா முட்டாள்... இப்ப அந்த மணியக்காரன்
பார்வை நம்ம கார் மேலதான் இருக்கும். எப்ப நாம இந்த
வீட்டுக்குள்ள நுழைஞ்சோமோ அப்பவே அவனுக்கு
தகவல் போயிருக்கும். ஆகையால நாம இந்த பின்
வழியா போவோம். இப்படியே போனா எங்க போகும்?''

''பின்பக்கம் வயல்காடுதான்... வரப்பு வழியா
போனா நாம ஊருக்குள்ள வந்த பாதையை பிடிச்சுட
லாம்...''

''அப்ப வா ஓடுவோம்...''

''இரு முதல்ல கலெக்டருக்கு போன் போட்றேன்...''

''இரு முதல்ல கலெக்டருக்கு போன் போட முயற்சிக்கும் போது அவன்
- வின்சென்ட் போன் போட முயற்சிக்கும் போது அவன்
மணிக்கட்டு மேல் எங்கிருந்தோ இருந்து பாய்ந்து வந்த
ஒரு அங்குல ஊசி ஒன்று நறுக்கென்று ஏறியது - அந்த
வேகத்தில் செல்போன் கீழே விழவும் பக்கவாட்டில்
அடர்த்தியான புதர்களை விலக்கிக் கொண்டு நான்கு பேர்
வந்து நின்றனர்.

அவர்களில் ஒருவன் கையில் ஊதுகுழல் போல
ஒரு ஆயுதம். அதைக் கொண்டுதான் ஊசியை எரிந்திருந்
தான். வின்சென்ட் அந்த ஊசியை பிடுங்கும்போதே
மயங்கிவிட்டான். அதில் செலுத்தப்பட்டிருந்த மயக்க
மருந்தின் விளைவு!

வெறித்துப் பார்த்த கேசவனின் தோளிலும் ஒரு
ஊசி ஏறியது. அவனும் மயங்கினான்!

இருவரது உடல்களும் அவர்களால் தூக்கப்பட்ட அப்படியே அவர்கள் பின்பக்கமாக சென்றனர். அந்த முன் தங்கள் செல்போனில் ஒன்றை ஒருவன் இயக் யதில் குதிரைக் குளம்படி சப்தமும் கனைக்கும் சப்தமு எழும்பியது.

ஸ்பீக்கர் போனில் அதை பலமாய் ஒலிபரப்பினால் அக்கம் பக்கம் விடைத்துப் போக வேண்டுமே?

அது ஒரு அத்துவானக்காடு!

வின்சென்ட்டும் கேசவனும் காட்டு மரம் ஒன்றி கட்டப்பட்டிருந்தனர். இருவரிடமும் மயக்கம் விலகி யிருந்தது.

சுற்றிலும் அந்த நான்கு பேர்...

இடையில் கார் ஒன்று வரும் சப்தம் - மணியக்கா ரும் அவரது மச்சினனும்தான் வந்திருந்தனர்.

மணியக்காரர் ஷாலால் தலையை மூடியிருந்தார்.

அருகில் வந்த பிறகுதான் விலக்கினார்.

அவரை பார்த்த வின்சென்ட்டுக்கு ஆத்திரம் பொங் கியது.

''மணியக்காரரே நீங்க இவ்வளவு மோசமானவர்னு நான் நினைக்கவேயில்லை'' என்றான்.

''மாமா... விட்டா நீதி நியாயம்னு உளற ஆரம்பிச் சிடுவாங்க... இவனுங்களுக்கு நம்பள பத்தின உண்மை தெரிஞ்சி போச்சு. போட்டுத் தள்ளி அந்த வீட்லையே புதைச்சு பிட்றதுதான் சரி'' என்றான் மணியக்காரரின் மச்சினன்.

''அப்ப அப்படியே செய்துடுங்கடா.'' என்று ஒரு வரியில் வந்த விஷயத்தை முடித்துக் கொண்டு மணியக் காரர் திரும்பத் தொடங்கினார்.

''மணியக்காரரே... இது பெரிய பாவம். நீங்க எங்கள மட்டும் ஏமாத்தல - தெய்வத்தையும் ஏமாத்தறேள்?'' கத்தினான் கேசவன். அந்த நிலையிலும் சிரித்தான் வின்சென்ட்.

''எப்படிடா வின்சென்ட் இப்பவும் உன்னால சிரிக்க முடியறது?''

''சிரிக்காம என்னடா பண்ண... நம்மை இந்த ஆள் ஏமாத்தினான்னு நீ நினைச்சது சரி... தெய்வத்தையும் இன்னும் அது இருக்குங்கற நம்பிக்கைலயே பேசறி யேடா? அது இருந்திருந்தா இப்படியா விட்டு வெச்சிருக் கும்?'' - அவன் கேள்வி நெஞ்சில் குத்தியது. கண்களிலும் கண்ணீர் பிரண்டு வந்தது.

அப்போது வானில் மழை வருவதற்கான அறிகுறி களும் ஆரம்பமாகி விட்டது. அதற்கு நடுவில் துப்பாக்கிக் குண்டு வெடிக்கும் சப்தமும் கேட்டது!

அவர்களை சுற்றி இருந்த நான்கு பேருமே அதை கேட்டு விக்கித்துப் போயினர். ஒருவன் சப்தம் வந்த திக்கு நோக்கி ஓடிச் சென்று பார்த்தபோது சிறிது தூரத்தில் மணியக்காரரும் அவர் மச்சினனும் கீழே விழுந்து கிடந்த னர். அவர்கள் உடல் துடித்தபடி இருந்தது.

அதை பார்த்தவன் திரும்பி ஓடிவந்தான்.

தன் சகாக்களிடம் பதட்டத்தோடு பேசினான்.

''டேய்.. நம்ம முதலாளியை யாரோ சுட்டுட்டாங்க. போலீஸ்தான் சுத்தி வளைச்சிருச்சு போல தெரியுது. வாங்கடா ஓடுவோம்...'' - அவன் தன் கைவசம் உள்ள துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டு ஓட ஆரம் பித்தான். அவர்களும் அவனைத் தொடர்ந்து ஓடத் தொடங்கினர். அதில் ஒருவன் கேசவனை சுட்டுவிட்டு

செல்வோம் என்பதுபோல் துப்பாக்கியை நீட்டவும் அவன் மார்பு மேலும் எங்கிருந்தோ வந்த தோட்டா வானது பாய்ந்தது.

கேசவனும் வின்செண்ட்டும் மிரண்டு போனார்கள்.

சப்தம் அடங்கிய நிலையில் குதிரை ஒன்றின் கனைப்பொலி. கேசவனுக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. வின்செண்ட்டுக்கு ஏதோ நடக்கப் போவது மட்டும் புரிந்தது. அதற்கு தோதாக எதிரில் குதிரை மேல் ஒருவர். அவர் கையில்தான் துப்பாக்கி. நல்ல முரட்டு மீசை.

அவரை பார்த்த நொடி கேசவனுக்குள் பழைய நினைவு. பிஞ்சுக் குழந்தையாக இருந்து தொலைந்த போது வந்த அதே நபர்...

''ஐயா நீங்களா?''

''நானேதான்... நீ சின்ன புள்ளையா இருந்தபோதும் வந்து காப்பாத்தினேன். இப்பவும் வந்து காப்பாத்தறேன். எப்பப்பார் இப்படி தப்பானவங்ககிட்ட வந்து மாட்டிக் கிறியே?''

- அவர் பதில் கேசவனை சிலிர்க்கச் செய்தது.

வின்செண்ட் கூட அதை கேட்டு மிரண்டு போய், ''ஐயா நீங்க யார்?'' என்று கேட்டான்.

''வேட்டைக்காரன்... அப்படித்தானே நீ நினைச்சே.'' - அந்த பதில் வின்செண்ட்டின் பொட்டில் அடித்தது. அவர் பதிலோடு பதிலாக கைகட்டுகளை அவிழ்த்துவிட்டார். பின் ''நான் வேட்டைக்காரன்தான்... இன்னிக்கு ஒரு மிருகமும் கிடைக்கல... என்னடா இதுன்னு சலிச்சுப் போய் வந்தேன். இந்த பயலுக சிக்குனாங்க! இவங்க ரொம்பவே ஆட்டம் போட்டுட்டாங்க. நானும் திருந்து

வாங்க திருந்துவாங்கன்னு எவ்வளவு தடவைதான் சந்தர்ப்பம் கொடுக்கறது?'' - அவர் கேட்ட விதம் சிரித்த விதம் பார்த்த விதம் எல்லாமே அமானுஷ்யமாக இருந் தது.

''ஐயா உண்மையை சொல்லுங்க நீங்க யாரு?''

''அதான் சொன்னேன்ல வேட்டைக்காரன்னு.''

''இல்ல... நீங்க கருப்பசாமி...''

''பார்றா, என் பேரை கரெக்டா சொல்லிட்டியே?''

''இல்ல நீங்க கருப்புதான்...''

''நானும் மறுக்கலையே...''

''உங்க உதவியை மறக்கவே முடியாது...''

''நான் ஒண்ணும் உங்களுக்காக செய்யல... உங்க வீட்ல ஒரு கிழவி இருக்குல்ல...''

''கிழவி... ஆங் என் பாட்டி!''

''அதுக்காகத்தான் செய்தேன். இப்ப வழியில கூட பார்த்தேன். போற வழில என் பேரனும் அவன் சினேகித னும் கண்ணுல பட்டா வேகமா அனுப்பி வையுங்கன்னு சொல்லிச்சு. அதான் வந்தேன்...''

''பா.. பா.. பாட்டியை பார்த்தீங்களா?''

''போய் கேட்டு தெரிஞ்சுக்கோ... அப்புறம் யாருக் கெல்லாம் தகவல் தரணுமோ தாங்க... அந்த வீட்டையும் சுத்தப்படுத்தி யாருக்காவது வித்துடுங்க. சும்மா போட்டு வச்சாலே இப்படித்தான் - திருட்டு பசங்க அங்க ஒதுங் கிடுவாங்க. திருடனுங்க வளர்றதுக்கு நாமதான் காரணமா இருக்கோம்.''

''நீங்களா இப்படி சொல்றீங்க?''

''பின்ன... சாமியா வந்து சொல்லும். என்னை

மாதிரி ஆசாமிதான் சொல்ல முடியும். என்ன நான் சொல்றது சரிதானே?''

- அந்த மனிதர் மீசையை நீவிக் கொண்டு கண் சிமிட்டிவிட்டு திரும்பவும் குதிரையில் ஏறிக்கொண்டார். வின்சென்டை பார்த்து சிரித்தபடியே ''புத்திசாலி நீ... உனக்கு அறிவு அதிகம். ஆனா ஞானம் இல்ல... இனிமே உனக்கு ஞானமும் வளர ஆரம்பிக்கும்னு நம்பறேன்'' என்று புறப்பட்டார்.

குதிரை கண்களை விட்டு மறைந்துவிட்டது.

கேசவன் சிலிர்த்துப் போய் கைகூப்பியிருந்தான். வின்சென்ட்டுக்கு ஒன்றும் புரியவில்லை. தலையை உதறிக் கொண்டான். இருவரும் நடந்தார்கள். மழை வானம் தூர ஆரம்பித்து காற்றும் வலுத்தது. அந்த காற்றுக்குள் கேசவன் வரையில் கருப்பன் தெரிந்தான். வின் சென்ட்டுக்கோ ஒரு தர்மதேவன் தெரிந்தான்!

(முற்றும்)